பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kālaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 28 செவ்வாய்க்கிழமை 12.03.2019 கதிர் 128

**இது ரகசியம் அல்ல!**

'குடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு' என்பார்கள். அந்த மாதிரித்தான் தமிழர் தரப்புக்கு இனப் பிரச்சினை தீர்வு தொடர்பாகத் தென்னிலங்கை அரசியல் தரப்புகளும், அதிகாரப் பிரிவினரும் தரும் வாக்குறுதிகள். குடிகாரன் பேச்சு காற்றில் பக்கம் 02 >>>



மன்னார் மனிதப் புதைகுழி எலும்புகள் மீது இன்னொரு நாட்டில் காபன் பரிசோதனை உள்ளே பக். 03



நுண்கடன் திட்டம்; குடும்பச் சீரழிவுகளை தடுக்க தாமதம் ஏன்? உள்ளே பக். 08



கிளிநொச்சியில் சிறப்பான மாட்டு வண்டிச் சவாரி! உள்ளே பக். 10



**ஜனநாயகத்தைக் காப்பாற்றுதல்**

**ஊழலுக்கு எதிராகப் போராடுதல்**

**அதிகார துஷ்பிரயோகத்தை எதிர்த்தல்**

# 3 விடயங்களில் கூட்டமைப்புடன் ஜே.வி.பி. இணைந்து செயற்படும்

**கொழும்பு,மார்ச்12**

**ஜனநாயகத்தை நிலைநாட்டுதல், ஊழல் மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகத்துக்கு எதிராகப் போராடுதல் ஆகிய விடயங்களில் ஒன்றிணைந்து செயற்படுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜே.வி.பியும் தீர்மானித்திருக்கின்றன.**

**இரண்டு தரப்புகளினதும் தலைவர்கள் நேற்றுக் கொழும்பில் சந்தித்தபோது இது தொடர்பான தீர்மானத்துக்கு வந்தனர்.** பக்கம் 11 >>>

## ஐ.நாவின் தீர்மானத்தை ஜனாதிபதி எதிர்த்தால் போராட்டம் வெடிக்கும்!

சபையில் மாவை எம்.பி. எச்சரிக்கை



கொழும்பு, மார்ச் 12

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி தடையாக இருப்பாராயின், அதற்கு எதிராக அறவழியில் பக்கம் 11 >>>

## சுமந்திரன் எம்.பியை எச்சரிக்கிறார் சிவாஜி!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 12

மன்னாதி மன்னர்களை எல்லாம் மக்கள் வேரோடு பிடுங்கி எறிந்த வரலாற்றைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் அறிந்துகொள்ளவேண்டும் எனக் கூறியுள்ள வடக்கு மாகாணசபை முன்னாள் பக்கம் 11 >>>

## இலங்கைக்குக் கால அவகாசம் வழங்கவேகூடாது தமிழ்க் கட்சிகளிடமும் ஒருமித்த நிலை வேண்டும்

யாழ். பல்கலைக்கழகச் சமூகம் வலியுறுத்தல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 12

ஐ.நாவில் இலங்கைக்குக் கால அவகாசம் வழங்கக்கூடாது என்றஒட்டுமொத்ததமிழ்மக்களின் கோரிக்கையை ஏற்று மக்கள் பிரதிநிதிகளும் செயற்படவேண்டும். அவ்வாறு பக்கம் 11 >>>

## அரசியலில் சுமந்திரன் விண்ணர் கிடையாது!

கூறுகிறார் சுரேஷ் பிறேமச்சந்திரன்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 12

தமிழ்க் கட்சிகளுக்குச் சவால் விடத் தெரிந்த சுமந்திரனுக்குத் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கத் தெரிய பக்கம் 11 >>>

## சர்வதேசத்தின் ஆதரவைக் கோரி சனியன்று யாழில் மக்கள் எழுச்சி



யாழ்.பல்கலை சமூகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 40 ஆவது பக்கம் 02 >>>

## கரன்னகொடவிடம் நேற்று 8 மணி நேரம் விசாரணை



கொழும்பு, மார்ச் 12

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவிடம், குற்றப் புலனாய்வுப் பக்கம் 02 >>>

## காணாமற்போனோர் விடயத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும்

அமீர் அலி சபையில் வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச் 12

வடக்கு – கிழக்கில் காணாமற்போனோர் விடயத்தில் அரசு அதிக அக்கறையுடன் செயற்படவேண்டும் என கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் அமீர் அலி பக்கம் 02 >>>

## ஐ.நா. மனித உரிமை ஆணையரின் அறிக்கையால் எமக்கு ஏமாற்றமே!

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 12

இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை ஏமாற்றமளிப்பதாக உள்ளது என்று தமிழ் தேசிய மக்கள் முன்ன பக்கம் 02 >>>

## மாகாணத் தேர்தல் தாமதம்; கூட்டமைப்புமே பொறுப்பு

கூறுகிறார் ஜீ.எல்.பீரிஸ்



கொழும்பு, மார்ச் 12

மாகாண சபை தேர்தல் பிற்போடப்பட்டு வருகின்றமை குறித்து மக்களுக்குப் பொறுப்புக் கூறும் பக்கம் 02 >>>

## தேசிய உற்பத்தியில் வீழ்ச்சி!

சுட்டிக்காட்டுகிறார் மஹிந்த

கொழும்பு, மார்ச் 12

நாட்டின் தேசிய உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக எதிர்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மாத்தறை பொல் பக்கம் 02 >>>



## சர்வதேச அழுத்தத்திலிருந்து இலங்கை தப்பிக்க வாய்ப்பு!

ஜெஹான் பெரேரா கருத்து

கொழும்பு, மார்ச் 12

இலங்கை மீதான சர்வதேச நெருக்கடிகள் குறைவதற்கு வாய்ப்பிருப் பக்கம் 11 >>>

விளம்பரம் மற்றும் செய்தி தொடர்பு
kalaikkathirnews@gmail.com
https://kalaikathir.online

காலைக்கதிர் Kalaikathir



## சர்வதேசத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தக் காலப்பகுதியில் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் நிரந்தர மற்றும் பயனுறுதி வாய்ந்த தீர்வை நோக்கி நகர்த்தும்வகையில்யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் சனிக்கிழமை முன்னெடுக்கப்படும் மக்கள் எழுச்சிப் பேரணி முக்கியத்துவம் வாய்ந்தது என யாழ். பல்கலைக்கழகச் சமூகம் தெரிவித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் பல்கலைக்கழக ஆசிரியர் கள் சங்கத் தலைவர் திருமதி கோசலை மதன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்–

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையானது மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பேசக்கூடிய களமாகவும், தீர்வை நோக்கிச் சம்மந்தப்பட்டவர்களைத் தள்ளுகின்ற விசையாகவும் காணப்படுகிறது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள்,மனித உரிமை மீறல்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கவனத்திற்குப் பல்லேறு தடவைகள் கொண்டுவரப்பட்டுள்ளதோடு பல்வேறு தீர்வு யோசனைகள் முன்வைக்கப்பட்டு பரிந்துரைக்கப்பட்டும் உள்ளன.

ஆனாலும் இலங்கை மனித உரிமைகள் விவகாரங்கள் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் கவுன் ஸிலினால் பரிந்துரைக்கப்படும் ஆலோசனைகள் இலங்கை அரசினால் கருத்திற்கொள்ளப்பட்டு உரிய முறையில் செயற்படுத்தப்படாமையை நாங்கள் அவதானிக்கின்றோம்.

இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் முன்வைக்கப்பட்ட வெளிநாட்டு நிபுணர்களின் பங்களிப்புடன் கூடிய குற்ற விசாரணைகளை ஆரம்பிக்க வல்லதான நீதிமன்றப் பொறிமுறையொன்று இன்னமும் அமைக்கப்படவில்லை. மாறாக போர்க்குற்ற விசாரணை தொடர்பானசெயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு இலங்கை அரசு கால அவகாசம் கேட்கின்ற நிலையும், மனித உரிமைகள் சபையானது அதற்கான அவகாசத்தை வழங்குகின்ற நிலைமையுமே காணப்படுகிறது.

இந்த நிலையில்தான் பாதிக்கப்பட்ட மக்களின் குரல்களை வலுப்படுத்தி உடனடித் தீர்வையும் நீதியையும் நோக்கி அவர்களை நெறிப்படுத்தும் வகையில் யாழ். பல்கலைக்கழகச் சமூகம் மாபெரும் எழுச்சிப் பேரணி ஒன்றை எதிர்வரும் 16ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி பல்வேறு போராட்டங்கள் நாடு முழுவதும் நடத்தப்பட்டு உள்ளன – நடத்தப்பட்டும் வருகின்றன. ஆனாலும் பாதிக்கப்பட்டவர்கள் நீதியைப் பெற்றுக் கொள்வதாய் இல்லை.

எனவே பொது மக்கள், மாணவர்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள், ஊழியர்கள் முதலான அனைத்து வலுமிக்க சக்திகளையும் ஒன்று திரட்டி உள்ளூரிலும், சர்வதேசத் தளத்திலும் நீதிக்கான செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதே இந்தப் பேரணியின் நோக்கம் ஆகும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் சபையின் 40ஆவது அமர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தக் காலப்படுதியில் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் நிரந்தர மற்றும் பயனுறுதி வாய்ந்த தீர்வை நோக்கி நகர்த்த முனையும் எமது இந்தச் செயற்பாடு மாற்றத்தை ஏற்படுத்த வழிவகுக்கும் என யாழ். பல்கலைக்கழக சமூகம் நம்பிக்கை கொண்டுள்ளது –என்றார்.

(ஐ-07)

## கரன்கொடவிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரிவினர் எட்டு மணி நேரம் விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

கொழும்பில் 11 இளைஞர்கள், கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கு தொடர்பாகவே அட்மிரல் கரன்னகொடவிடம் நேற்று விசாரணை நடத்தப்பட்டு வாக்கு மூலம் பதிவு செய்யப்பட் டது.

இந்த வழக்கில், அட்மிரல் கரன்னகொடவைக் கைது செய்வதற்கு உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

எனினும், நேற்று அவரை குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகி வாக்குமூலம் அளிக்குமாறு உயர்நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தது.

இதற்கமையவே, நேற்றுக் காலை 9 மணியளவில் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையான அவரிடம் 8 மணிநேரம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

இதையடுத்து மாலை 5 மணியளவில் அவர் குற்றப்புலனாய்வுப் பிரிவு தலைமையகத்தில் இருந்து வெளியேறினார். (ஐ)

## ஐ.நா. மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை அரசு 2015ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை அளித்த வாக்குறுதிகளின் அடிப்படையில் பொறுப்புக்கூறல் விடயத்தில் ஆக்கபூர்வமாக எதையும் செய்திருக்காத நிலையில் பாதுகாப்புச் சபைக்கு பரிந்துரை செய்கின்ற வகையில் அவர்களுடைய அறிக்கை அமைய வேண்டும் என்பது எங்களின் எதிர்பார்ப்பாக இருந்தது. எனினும் அவரது அறிக்கை அவ்வாறான பரிந்துரைகளைச் செய்யாதது எமக்கு ஏமாற்றத்தையே தந்திருக்கிறது – என்றார். (ஐ)

# நாடாளுமன்ற தேர்தலுக்கு தயாராகும் ஐ.தே.கட்சி

வரவு - செலவுத் திட்டத்தை தொடர்ந்து நாடாளுமன்ற தேர்தலுக்குச் செல்வது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி ஆராய்ந்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேர்தலுக்காக தயார்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது அந்த கட்சி யினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும் எதிர்வரும் 5ஆம் திகதி வரவு செலவுத் திட்டம் மீதான வாக் கெடுப்பின் பின்னரே அது தொடர்பான இறுதி



தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன எனக் கூறப்படுகின்றது.

## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஹேனபகுதியில்நேற்றுஇடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடன் சுமை, பொருளாதார நெருக்கடியின் பிடிக்குள் சிக்குப்பட்டுள்ள நடுத்தர மக்களை மேலும் நெருக்கடிகளுக்குள்ளாக்கும் வரவு – செலவுத் திட்டத்தை அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

2019 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் தற்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கவர்ச்சியான சொற்பிரயோகங்கள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டுள்ளன.

நடைமுறைக்கு பொருத்தமற்ற விடயங்கள் பல வரவு–செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. நாட்டு மக்கள் கடன் சுமைக்குள் இன்று தள்ளப்பட்டுள்ளார்கள். மறுபுறம் தேசிய உற்பத்திகளும் வீழ்ச்சியடைந்து வருகின்றது.

தற்போதைய வரவு–செலவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் மக்கள் மேலும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்படுவார்கள்.

ஆகவே மக்களுக்காக இந்த வரவு செலவுத்திட்டம் தோற்கடிக்கப்படும்–என்றார். (ஐ)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று வரவு –செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு மாதாந்தம் ஆறாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாக வரவு–செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை நான் வரவேற்கின்றேன்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கும் வரை இந்த நிதி வழங்கப்படவுள்ளது. இது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு ஒரு நம்பிக்கையளிக்கும் விடயமாகக் காணப்படுகின்றது.

எனினும் இந்த நிதி போதுமானதாக இல்லை. இந்த நிதி அதிகரிக்கப்பட வேண்டும். இது தொடர்பாக நிதியமைச்சரும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கவனம் செலுத்தவேண்டும்.

அத்துடன், காணாமற்போனோர் விடயத்தில் அரசு அதிக அக்கறை யுடன் செயற்படவேண்டும்–என்றார். (ஐ)

## மாகாணத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடப்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் உண்டு என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

மாகாணசபைத் தேர்தல்கள் தடைப்பட்டுள்ளமையால் முக்கியமாக பங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உண்டு என்பதால், இவ்விடயம் தொடர்பாக தமது மக்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு அவர்களுக்கு உண்டு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதிய தேர்தல் முறைமைக்கு ஆதரவு வழங்கியிருக்காவிடின் இன்று மாகாணசபைத் தேர்தல்களே இல்லாத இத்தகையதொரு நிலை ஏற்பட்டிருக்காது. வடக்கில் தற்போது மாகாணத் தேர்தல் நடந்திருக்கும் – என்றார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பறப்பது போல இவர்களின் வாக்குறுதிகளும் காற்றோடு காற்றாய்க் கலந்து விடும்.

இந்த வரிசையில் ஆகப் பிந்தியது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய வாக்குறுதி.

கடந்த மாதம் 20 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆரவாரம் ஏது மின்றிச் சந்தித்தார். மூன்றாவது ஆளுக்குத் தெரியாமல் நடந்த இந்தச் சந்திப்பில் இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சி தொடர்வதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். இவ்விடயம் குறித்து அடுத்த நாள் நாடாளுமன்றத்தில் பிரதமரையும் வைத்துக் கொண்டு பேசலாம் என்றார் ஜனாதிபதி. அதன்படி அடுத்த நாள் ஜனாதிபதி, பிரதமர் இருவரையும் கூட்டாகச் சந்தித்தார் சம்பந்தன்.

அந்தக் கூட்ட முடிவின்படி முக்கிய கட்சிகளின் தலைவர்களின் சந்திப்பு அடுத்த வாரம் நடைபெற்றது.

அதில் தமிழர் தரப்பு ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டியது. புதிய அரசமைப்பு உருவாக்க விடயத்தில் கட்சிகள் இடையே கருத்து முரண்பாடுகளும், குழப்பங்களும் இருந்தன. ஆனால் அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் எல்லா – அனைத்து – கட்சிகள் இடையேயும் இணக்க நிலையே காணப்பட்டது. ஆகவே பிரச்சினைக்குரியதல்லாத அந்த விடயங்களையாவது அரசமைப்புத் திருத்தமாகக் கொண்டு வரலாமே? – என்று தமிழர் தரப்புச் சுட்டிக்காட்டியது.

அதை ஜனாதிபதியும், பிரதமரும் ஏற்றுக் கொண்டனர். புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல் குழு சமர்ப்பித்த நகல் வடிவத்துக்கான முன்னோட்ட அறிக்கையில், சர்ச்சைக்கு உள்ளாகாத அதிகாரப் பகிர்வு தொடர்பான என்னென்ன யோசனைகளை அரசமைப்புத் திருத்தமாகக் கொண்டு வரலாம் என்பது குறித்துத் தீர்மானிக்க நான்கு பேர் கொண்ட உபகுழு ஒன்று அச்சந்திப்பில் நியமிக்கப்பட்டது.

எம்.ஏ.சுமந்திரன், டிலான் பெரேரா, ராஜித சேனாரத்தன, சரத் அமுனுகம ஆகியோரே அந்த நால்வரும்.

அடுத்த வாரத்துக்குள் அக்குழு கூடி முடிவுகளை எடுப்பதுடன், மீண்டும் அடுத்த வாரத்துக்குள் கட்சிப் பிரதிநிதிகள் ஒன்று கூடித் தீர்மானத்தை எடுப்பர் எனக் கடந்த மாதம் ஜனாதிபதி அறிவித்தார்.

மேற்படி உபகுழுவின் கூட்டத்தை அவசர அவசரமாகக் கூட்ட சுமந்திரன் முயன்றுதான் பார்த்தார். மற்றைய மூவரையும் ஒன்றாகப் பிடிப்பது மணலைக் கயிறாகத் திரிக்கும் சங்கதி என்பதைப் புரிந்து கொண்டார்.

அடுத்த வாரம் சந்தித்து இறுதித் தீர்மானம் எடுக்கலாம் என்றார் ஜனாதிபதி. இரண்டு வாரம் கழிந்தமைதான் மிச்சம். எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இந்த விடயத்தை விரைவாக முடித்து ஒரு தீர்வு காணுவோம் என்ற ஜனாதிபதியின் உறுதி மொழி குடிகாரன் பேச்சுப் போலாகி விட்டது.

உபகுழுவைக் கூட்ட முடியாது அல்லாடும் சுமந்திரன், இப்போது ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டார். இனிமேல் உப குழுவைக் கூட்ட முயற்சிப்பதில்லை, தாமே தம் பாட்டில் வழிகாட்டல் குழுவின் நகல் வடிவத்தை ஆராய்ந்து அதில் சர்ச்சைக்குரியதல்லாத –அதிகாரப் பகிர்வுடன் தொடர்புடைய – ஷரத்துக்களை ஒழுங்குபடுத்தி, ஓர் ஒழுங்கான வடிவ அறிக்கையை ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும் கையளிப்பது என்பதுதான் அவர் எடுத்த முடிவு.

எது, எப்படியென்றாலும், நீதியான அதிகாரப் பரவலாக்கலைத் தமிழர்களுக்குச் செய்வதன் மூலம் இந்த நாட்டில் அமைதியையும்,சமாதானத்தையும்,நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவோம் என்ற திடசங்கற்பம் – பற்றுறுதி – தீர்மானம் – சிங்களத் தலைமைக்கு வராத வரை இந்த முயற்சிகள் எவையும் வெற்றி பெறப் போவதில்லை.

அதுவரையில், தென்னிலங்கையின் வாக்குறுதிகள் 'குடிகாரன் பேச்சு' போலவே காற்றோடு கலந்து போவது தவிர்க்க முடியாதது.

- மின்னல் -


## சிறுவிளம்பரங்கள்

### விற்பனைக்கு

**கொழும்பு** தெகிவளையில் பாவித்த நிலையிலுள்ள வீட்டுத் தளபாடங்கள் மற்றும் எலற்றிக் பொருள்களான A.C. ஏயாக்கூலார் என்பன உடன் விற்பனைக்கு தொடர்பு:- வினோ (0774022755)

### தேவை

**கொக்குவில்** கிழக்கில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு சகல வசதிகளுடன் கூடிய வீடு உடன் வாடகைக்கு தேவை (நல்லூர், கண்டி றோட்) போன்ற இடம் விரும்பத்தக்கது.
தொடர்பு:- (0771043161)

### சேவை

**யாழ்ப்பாணத்தின்** அனைத்துப் பகுதிகளிலும் தங்கி இருந்து வெல்டிங்க வேலை குறித்த தவணையில் செய்து தரப்படும் தொடர்பு:- சூட்டி (0769495917)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) பகுதி நேரம் – 2019

16.03.2019 அன்று ஆரம்பிக்கப்படவிருந்த மேற்படி கற்கை நெறியானது தவிர்க்க முடியாத காரணத்தினால் 17.03.2019 அன்று ஆரம்பமாகும் என்பதனை அறியத் தருகின்றோம்.

ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று கலைப்பீட விரிவுரை மண்டபத்திற்கு (409) மாணவர்கள் காலை 9.00 மணிக்கு சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

**பதிவாளர்.**

# மன்னார் மனிதப் புதைகுழி எலும்புகள் மீது இன்னொரு நாட்டில் காபன் பரிசோதனை

## அவசியம் எனக் கோருகின்றார் வன்னி மாவட்ட எம்.பி. சிவமோகன்

மன்னார், மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பாக வேறொரு நாட்டிலும் காபன் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் தெரிவித்துள்ளார்.

மன்னார் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளின் மாதிரிகள் புளோரிடாவில் உள்ள ஆய்வகத்தில் காபன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது, அவை, 1499 ஆம் ஆண்டுக்கும், 1719 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்டவை என்று தெரியவந்தது.

எனினும், இந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கூற முடியாது. அதேவேளை, மன்னார் புதைகுழியின் முக்கியத்துவம் கருதி, இரண்டாவது ஆய்வு ஒன்றை



மேற்கொள்வது முக்கியம்.

முன்னதாக, திருக்கேதீஸ்வரத்தில் 96 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை புழங்காலத்தை சேர்ந்தவை என்று தொல்பொருள் திணைக்களம் கூறியிருந்தது.

இப்போது மன்னார் புதைகுழியையும் பழங்காலத்தைச் சேர்ந்தது என்று அமெரிக்க ஆய்வு கூறியுள்ளது.

புளோரிடாவில் உள்ள ஆய்வகம், எலும்புக்கூடுகளை அடையாளம் காணும் முயற்சியில் ஈடுபடவில்லை. எனவே, எப்படி அந்தப் புதைகுழி வந்தது என்பதை கண்டறியும் வகையில், மேலதிக ஆய்வு நடத்தப்பட வேண்டும்.

போரின் போது பெருமளவு மக்கள் காணாமற் போயுள்ளனர். எனவே மனிதப் புதைகுழி அகழ்வை விரிவுபடுத்த வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண மேலதிக ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும்.

புதைகுழி அகழ்வு மற்றும் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியமையைக் கூட்டமைப்பு வலியுறுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அரசுக்கு எதிரான எந்தக் கூட்டணிக்கும் முழு ஆதரவளிக்குமாம் சுதந்திரக் கட்சி!

## அக்கட்சி பொதுச் செயலர் தயாசிறி கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 12

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கு எதிராக அமைக்கப்படும் எந்தவொரு கூட்டணிக்கும் ஒத்துழைப்பு வழங்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாரென அக்கட்சியின் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேள்ளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மறறும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஆகியன இணைந்து புதிய கூட்டமைப்பு அமைப்பது தொடர்பில் கருத்துக்கள் வெளியாகியிருந்த நிலையில், தற்போது இருதரப்பினருக்கிடையில் சிக்கல் நிலை எழுந்துள்ளதாக, அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் தெரிவிலும், இரு தரப்பினருக்கிடையில் முரண்பாடுகள் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மஹிந்த – மைத்திரி சேர்ந்தால் மட்டுமே ஜனாதிபதித் தேர்தலில் வெல்ல முடியும்

## இப்படிக் கூறுகின்றார் டிலான் பெரேரா



கொழும்பு, மார்ச்12

ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்படுபவர் யாராக இருந்தாலும் பரவாயில்லை, அவர் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவராக இருக்க வேண்டும் என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை வெற்றி கொள்ள மஹிந்த ராஜபக்ஷவையும், மைத்திரிபால சிறிசேனவையும் இணைத்துக் கொண்டு செல்லும் வேலைத்திட்டமொன்றே அவசியமானது.

சிலர் மஹிந்த ராஜபக்ஷவையே ஜனாதிபதி வேட்பாளராக கொண்டுவரலாம் எனக் கூறிவருகின்றனர். எந்தச் சட்டத்தை வைத்து அவர்கள் கூறுகின்றார்களோ தெரியாது. நான் அறிந்து வைத்துள்ள சட்டத்தின் பிரகாரம் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது. – எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஸ்ரீல.சு.கவின் பொதுக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறினார். (மு)

# முற்கூட்டி பொதுத் தேர்தலை நடத்துவதற்கு யானைக் கட்சி எம்.பிக்கள் கடும் ஆட்சேபம்

கொழும்பு, மார்ச்12

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்தும் யோசனைக்கு ஐக்கியதேசியக்கட்சி எம்.பிக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர் என நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

வரவு – செலவுத்திட்டக் கூட்டத்தொடர் முடிவடைந்த பின்னர் ஜூன் மாதமளவில், நாடாளுமன்றத்தைக் கலைக்கும் யோசனை முன்வைக்கப்படலாம் என அரசியல் களத்தில் பெரும் பரபரப்பாகவும், பலகோணங்களிலும் பேசப்பட்டு வருகின்றன.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம், நான்கரை ஆண்டுகள் முடிவடையும்வரை நாடாளுமன்றத்தைக்கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது.

ஒக்ரோபர் 26 அரசியல் சூழ்ச்சியை அடுத்து வெளியான உயர்நீதிமன்றத் தீர்ப்பின் ஊடாகவும் இது உறுதிப்படுத்தப்பட்டது.

எனினும், நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவுடன் தீர்மானமொன்றை நிறைவேற்றினால் பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம்.

இதற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன எனக் கூறப்படும் நிலையிலேயே, ஐ.தே.கவின் பெரும்பானலான எம்.பிக்கள் அதற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் நவம்பர், டிசம்பர் மாதங்களில் நடத்தப்படவேண்டும். அதற்கு முன்னர் திடீரென பொதுத்தேர்தல் நடத்தப்படக் கூடாது. ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த கையோடு பொதுத்தேர்தலை நடத்தலாம் – என்பதே அவர்களின் நிலைப்பாடாக இருந்து வருகின்றது.

# யானை தாக்கியதில் வாகனத்தில் வந்தவர் மரணம் மற்றொருவர் படுகாயம்; யானைக்கும் பலத்த காயம்

## புத்தளம்- அனுராதபுரம் பிரதான வீதியில் நேற்று அதிகாலை விபரீதம்





புத்தளம், மார்ச்12

புத்தளம் - அனுராதபுரம் பிரதான வீதியின் 17 ஆம் கட்டை புத்திதசுன்கம பகுதியில் நேற்று அதிகாலை பயணித்த வாகனம் ஒன்றின் மீது காட்டு யானை தாக்குதல் நடத்தியதில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன், மேலும் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அந்த யானையும் பலத்த காயங்களுக்கு உள்ளாகியது

புத்தளம், மணல்குன்று பகுதியைச் சேர்ந்த அப்துல் ஹமீட் பௌசுல் ஹக் (வயது 39) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனக் கருவலகஸ்வெவ பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 3 மணி அளவில் புத்தளத்தில் இருந்து தம்புள்ள பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த கப் வாகனம் ஒன்றின் மீது, வீதியில் தரித்து நின்ற காட்டு யானை ஒன்று தாக்குதல் நடத்தியதில் இவ்விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதன்போது அந்தக் கப் வாகனத்தில் இருவர் பயணித்துள்ளனர். காட்டுயானை வாகனத்ததைத் தாக்கிச் சேதப்படுத்தியதில் சாரதிக்குப் பக்கத்தில் இருந்து பயணித்த நபர் உயிரிழந்துள்ளார். வாகனத்தின் சாரதி பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, அந்த வாகனத்தின் மீது தாக்குதல் நடத்திய காட்டுயானை, பலத்த காயங்களுக்கு உள்ளாகி சம்பவம் நடந்த இடத்திலேயே வீழ்ந்துள்ளது.

காயமடைந்த அந்தயானைக்குச் சிகிச்சை அளிப்பதற்கு வடமேல் மாகாண வனவிலங்குத் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

யானைத் தாக்குதலுக்கு உள்ளான கப் வாகனத்தின் முன்பக்கம் கடுமையாகச் சேதமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கருவலகஸ்வெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

புத்தளம் –அனுராதபுரம் வீதியில் கடந்த சில மாதங்களாக இவ்வாறு காட்டு யானைகள், வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன. அதனால் பல உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

## ஜெனீவாக் குழப்பங்கள்

ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிளின் கூட்டத் தொடரில் கையளிக்க என ரெலோவின் செயலாளர் நாயகம் ஸ்ரீகாந்தா - தவிசாளர் சிவாஜிலிங்கம் இணையினால் முன்னெடுத்துத் தயாரிக்கப்பட்ட கடிதத்தில் முக்கிய சில தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஒப்பமிட்டுள்ளனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன், ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரே இக் கடிதத்தில் ஒப்பமிட்டிருக்கின்றனர்.

புளொட் தலைவர் த.சித்தார்த்தன் இக்கடிதத்தில் நேற்றுக் கையொப்பமிடுவார் என ஸ்ரீகாந்தா - சிவாஜிலிங்கம் இணையினால் நேற்றுமுன்தினம் மாலையில் பலத்த நம்பிக்கை வெளியிடப்படிருந்தது. ஆனால் நேற்று இப்பத்தி எழுதப்படும் வரை அந்தக் கடிதத்தில் சித்தார்த்தன் ஒப்பமிடவில்லை. அது மட்டுமல்ல, அதில் ஒப்பமிட அவர் பின்னடித்து வருகிறார் எனவும் அவருடன் நெருக்கமான வட்டாரங்களில் இருந்து அறிய வந்தது.

ஏற்கனவே தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவும் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவும் கடந்த வாரம் கொழும்பில் கூடி இவ்விடயத்தை விலாவாரியாக ஆராய்ந்திருந்தது. நீண்ட விவாதங்கள், ஆராய்வுகளின் பின்னர், ஜெனீவாவில் இலங்கை தொடர்பாக இம்முறையும் வரும் புதிய பிரேரணை, இலங்கை மீதான சர்வதேசக் கண்காணிப்பை நீடிக்கும் விடயமே தவிர, இலங்கைக்குக் கால அவகாச நீடிப்பு வழங்கும் பிரேரணை அல்ல என்று மேற்படி கூட்டங்களில் கூட்டமைப்புத் தலைமையான சம்பந்தன் - சுமந்திரன் இணை வழங்கிய விளக்கத்தை ஏற்றுக் கொள்ளும் முடிவு எட்டப்பட்டிருந்தது.

'அப்படி ஓர் இணக்கத்தை ஏற்றுக் கொண்ட பின்னர், கால நீடிப்பு வழங்கக் கூடாது என்ற கடிதத்தில் நான் எப்படி ஒப்பமிட முடியும்? அது பொருத்தமற்றதல்லவா?' - என்று மேற்படி கடிதத்தில் ஒப்பமிடுமாறு தன்னிடம் கோரும் தரப்புகளுக்கு சித்தார்த்தன் பதிலளிக்கின்றார் என்றும் தெரிகின்றது.

அப்படியானால், கூட்டமைப்பில் அச்சம் வகிக்கும் மற்றொரு கட்சியான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. மட்டும் இந்தக் கடிதத்தில் ஒப்பமிட்டமை எங்ஙனம்? அது, கூட்டமைப்பின் தீர்மானத்தை மீறிய செயல் இல்லையா என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது.

அதற்கு செல்வம் ஒரு விளக்கம் கூறுகின்றார்.

கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இது குறித்துப் பேசப்பட்டு, சுமந்திரன் - சம்பந்தன் போன்றோர் விளக்கமளித்தனர். ஆனால் அந்த முடிவை நாங்கள் ஏற்கவில்லை. இது குறித்து எங்களின் ரெலோ கட்சியுடன் பேசுவோம். அங்குதான் நாங்கள் முடிவு செய்வோம் என்றே கூட்டமைப்புக் கூட்டத்தில் கூறிவிட்டு வந்தேன். இப்போது எங்கள் கட்சி இந்தக் கடிதத்தில் ஒப்பமிடுவது என்ற தீர்மானத்திற்கு வந்தது. ஆகவே நான் ஒப்பமிட்டேன்" - என்று விளக்கம் கூறுகின்றார் செல்வம். அது சரியாக இருக்கலாம். அல்லது பிழையாக இருக்கலாம்.

ஆனால் ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸில் விவகாரங்களையும் கையாள்வதில் தமிழ்க் கூட்டமைப்பு ஒரு நிலைப்பட்ட கருத்தில் இல்லை என்பது மட்டும் அவரின் கூற்றினால் தெளிவாகின்றது.

அது மட்டுமல்ல, மறுபுறத்தில் சுரேஷ் பிறேமச்சந்திரன், ஆனந்தசங்கரி, விக்னேஸ்வரன், செல்வம் ஆகிய நால்வர் கையெழுத்திட்ட கடிதம் கூட ஒரு முகப்பட்டதாக இல்லை என்பதும், அதில் சில கவனிக்கத்தக்க முரண்பாடுகள் உள்ளன என்பதும் கூட புறமொதுக்கத்தக்கதல்ல.

இலங்கை விடயத்தில், இதுவரை நிறைவேற்றப்பட்ட இரண்டு தீர்மானங்களும், இலங்கைக்குக் கால அவகாசம் கொடுப்பன போன்றே அமைந்திருக்கின்றன என்றும்,

இனிமேல் இலங்கைக்குக் கால அவகாசம் வழங்கப்படக் கூடாது என்றும்

அவர்கள் நால்வரும் ஒப்பமிட்ட கடிதம் கருத்துரைக்கின்றது.

அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ள - விதந்துரைக்கப்பட்டுள்ள - இந்த நிலைப்பாட்டை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கவனத்தில் எடுத்துச் செயற்படுவதானால், அதன் தற்போதைய கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் எந்தப் பிரேரணையும் நிறைவேற்றப்பட முடியாது. இலங்கைக்குக் கால அவகாசம் வழங்குகின்ற அல்லது இலங்கை மீதான சர்வதேச கண்காணிப்பை நீடிக்கின்ற எந்தப் பிரேரணையோ, தீர்மானமோ வரக் கூடாது; வரமுடியாது என்பதுதான் அதன் பொருள்.

நல்லது. இந்த நான்கு கட்சித் தலைவர்களும் ஒப்பமிட்டுக் கோரும் இக்கடிதத்தின் பிரகாரம் புதிய பிரேரணை ஏதும் வராமல் இருந்தால் -

இதே கடிதத்தில் கூறியபடி, இலங்கையின் செயற்பாடுகளைக் கண்காணிக்கும் ஒரு கண்காணிப்பாளரை -அறிக்கையாளரை- நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கைப்படி நியமிக்கப்படும் அந்த அறிக்கையாளர் இலங்கையில் செயற்படுவதற்கு கவுன்ஸிலுக்கு ஓர் ஆணை தேவையல்லவா? இந்தக் கால அவகாசமோ அல்லது சர்வதேச மேற்பார்வையோ, அதை நீடித்தால்தானே அந்த அறிக்கையாளரும் இலங்கையில் செயற்பட முடியும்? புதியபிரேரணை கொண்டு வந்து கண்காணிப்பை நீடிக்கும் ஆணைபெற்றல்தானே அதைச் செய்யலாம்.

அப்படிப் பார்த்தால், ஒட்டு மொத்தத்தில் கூட்டமைப்புக்குள்ளும் குழப்பம், வெளிக் கட்சிகளுக்குள்ளும் குழப்பம். குழப்பம்தான் மிச்சம்.

# தோட்டத் தொழிலாளருக்கான நிலுவைக் கொடுப்பனவு அனைவரும் பங்களித்தால் நிச்சயம் பெற முடியும்

## இ.தொ.கா. மகளிர் தின விழாவில் ஆறுமுகன் தொண்டமான்



கூட்டுஒப்பந்தத்தில்தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைக் கொடுப்பனவை பெற்றுக்கொள்வதில் பல தடைகள் உள்ளன. இத் தடைகளை இல்லாமல் ஆக்குவதற்கு எல்லோருடைய பங்களிப்பும் கிடைத்தால் நிச்சயமாக நிலுவைக் கொடுப்பனவு தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்

'வீறு கொண்டெழுவாய் பெண்ணே புதுயுகம் காண்போம்' என்ற தொனிப்பொருளின் கீழ் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மகளிர் தின விழா நேற்று முன்தினம் மாலை ஹட்டன் டி.கே.டபிள்யூ கலாசார மண்டபத்தில் வெகு விமரிசையாக இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

1992ம் ஆண்டு முதல் கூட்டு ஒப்பந்த பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம். முதல் சம்பளமாக சத கணக்கில் ஆரம்பித்து அதன் பிறகு ரூபா கணக்கிலும், தற்போது நூறு ரூபா கணக்கிலும் பெற்று வருகின்றோம். சில காலங்களில் பேச்சுவார்த்தை இழுபறியான நிலையில் இருந்த போதிலும் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவை கொடுப்பனவை பெற்றுக்கொடுத்தோம்.

இம்முறை கூட்டு ஒப்பந்தத்தின் போது மூன்று மாதம் பேச்சுவார்த்தை நடத்தி வந்தோம். ஆயிரம் ரூபாய் கிடைக்காவிட்டால் 30ம் திகதி எனது பதவியை இராஜினாமாச் செய்வேன் என கூறினேன்.

திடீரென அரசாங்கம் மாறியது. புதிய பிரதமராக வந்தவரிடம் இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்திய பொழுது அவர் இதனை தருவதாக கூறினார்.

இருந்தபோதிலும் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்த பொழுது நான் 9 நாள் போராட்டம் செய்ய மக்களை அழைத்தேன். நீங்கள் முழு ஆதரவு ஒத்துழைப்பு வழங்கினீர்கள். இதன்போது சிலர் ஆதரவு வழங்குவதாக வந்தார்கள். ஆனால் அந்த ஆதரவு நேர்மையானமனம்சுத்தமானது அல்ல எனத் தெரிந்துக் கொண்டேன்.

போராட்டத்தின் 9வது நாள் இவர்களால் அரசாங்க சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல், விடுதிக்கு செல்லும் நீரினை துண்டித்தல், சொத்துகளுக்கு ஆபத்து ஏற்படுத்துதல், அரசாங்கம் சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கின்றது போல் ஆர்ப்பாட்டத்தைதிசைதிருப்பி இவற்றையெல்லாம். செய்தது காங்கிரஸ் என குற்றம் சுமத்தினார்கள்.

அதன் காரணமாக நான் இந்த போராட்டத்தில் இருந்து விலகிக் கொண்டேன். வந்தவர்கள். இதயசுத்தியுடன் இருந்திருந்தால் ஆயிரம் ரூபாய் அல்ல. 1200 ரூபாய் பெற்றிருக்கலாம்.

எமது மக்களுக்கு 50 ரூபாய் வாங்கி கொடுத்தால் அதற்கு இ.தொ.கா முழு பங்களிப்பினை செய்யும். 50 ரூபாய் அரசாங்கம் கொடுக்காவிட்டால். அரசாங்கத்திற்கு எதிராக என்ன செய்ய வேண்டுமோ அதை செய்ய நாங்கள் தயாராக உள்ளோம்.- என்றார்.

'வீறுகொண்டெழுவாய் பெண்ணே புதுயுகம் காண்போம்'

# இ.தொ.கா. மகளிர் தின விழா விமரிசையாக நடந்தது ஹட்டனில்





வீறு கொண்டெழுவாய் பெண்ணே புதுயுகம் காண்போம் என்ற தொனிப்பொருளின் கீழ் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மகளிர் தின விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை அட்டன் டி.கே.டபிள்யூ கலாசார மண்டபத்தில் வெகு விமரிசையாக இடம்பெற்றது இந்த விழா கட்சியின் பொது செயலாளரும், மகளிர் அணிதலைவியுமான அனுஷியா சிவராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்த விழாவில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் தலைவருமான ஆறுமுகன்தொண்டமான், மத்திய மாகாண முன்னாள் தமிழ் கல்வி அமைச்சர் எம். ரமேஷ்வரன் மற்றும் இ.தொ.காவின் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் ஹட்டன் டிக்கோயா நகர சபை தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோருடன் கட்சியின் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்

இந்த நிகழ்வின் போது மகளிரது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றமையோடு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மகளிர் அணி தலைவி உட்பட கட்சியின் பெண் உறுப்பினர்களுக்கு பொன்னாடை போர்த்தி அவர்களின் சேவைகளை பாராட்டிய கௌரவிப்பு நிகழ்வும், இடம்பெற்றமைகுறிப்பிடத்தக்கது. (உ)

## வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவாளர் சங்கமம்


'யாகம் தொடங்கி விட்டோம்' எனும் தோனிப் பொருளில் கூட்டுறவுத்துறையினர் நடத்தும் கூட்டுறவாளர் சங்கமம் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் என்று யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை தலைவர் தீ.சுந்தரலிங்கம் அறி வித்துள்ளார்.

## நாளை

12.03.2019
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம்:ஸப்தமி பி.இ. 12.35 வரை.
திதி : ரோகிணி பி.இ. 01.32 வரை.
சுபநேரம் : 04.52 - 06.22 வரை
இராகுகாலம் : 12.22 - 01.52 வரை

## மன்னார் மனிதப் புதைகுழி விவகாரம்:

# இராணுவத்தின் மீது குற்றம் சுமத்தியோர் இப்போது வாயடைப்பு என்கிறார் தளபதி



கொழும்பு,மார்ச்12

மன்னார் மனிதப் புதைகுழி விவகாரத்தில் எந்த ஆதாரமும் இல்லாமல் இலங்கை இராணுவத்தைக் குற்றம் சாட்ட முனைந்தவர்கள் வாயடைத்துப் போய் இருக்கிறார்கள் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

மன்னார் புதைகுழியில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகளின் மாதிரிகள் தொடர்பாக புளோரிடாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், எலும்புக்கூடுகள் பல நூற்றாண்டுகள் பழைமையானவை என்று தெரியவந்ததை அடுத்தே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

மன்னார் புதைகுழிக்கு இலங்கை இராணுவமே பொறுப்பு என்று அனைத்துலக சமூகத்திடம் கூறுவதற்கு பலரும் தயங்கவில்லை.

எல்லாவற்றுக்கும் இராணுவம் மீது குற்றம்சாட்டுகின்ற ஒரு வழக்கம் நீண்டகாலமாகவே இருந்து வருகிறது.

அனைத்துத் தரப்பினரும், ஏனையவர்கள் மீது குற்றம்சாட்டுவதற்கு முன்னதாக, விசாரணைகளை நடத்தி, சாட்சியங்களைப் பெற்று உறுதி செய்து கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(உ)

## சைக்கிளில் சென்ற வயோதிபர் மீது நாய் பாய்ந்ததில் அவர் உயிரிழப்பு

ரிதீகம, பானகமுவ பகுதியில் சைக்கிள் ஒன்றின் மீது நாய் பாய்ந்ததில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த நபர் ரிதீகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

தெலம்புகல்ல பகுதியைச் சேர்ந்த 81வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இதேவேளை கம்பஹா, கவுடன்கஹ பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து பாதையை விட்டு விலகி அருகில் இருந்த மரத்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பலத்த காயமடைந்த நபர் கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

கொட்டகொட பகுதியைச் சேர்ந்த 41வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## மின் தடை

யாழ்ப்பாணம், மார்ச் 11

உயர் அழுத்த மற் றும் தாழ் அழுத்த மின் விநியோகமங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.00 மணி யிலிருந்து மாலை 5.00 மணி வரை -

**வவுனியா பிரதேசத்தில் -**

லக்ஸபானா வீதி, தோணிக்கல் ஆகிய இடங்களிலும்-

**மன்னார் பிரதேசத்தில் -**

நாணாட்டான், பெரிய கரை சல் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.




## உதவும் கரங்களாக...

'நான் பசியாய் இருந்தேன் நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை. தாகமாயிருந்தேன் நீங்கள் என் தாகத்தை தணிக்கவில்லை. நான் அந்நியனாய் இருந்தேன், நீங்கள் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆடை இன்றி இருந்தேன் நீங்கள் எனக்கு ஆடை அளிக்கவில்லை. நோயுற்று இருந்தேன், சிறையில் இருந்தேன். என்னை கவனித்துக் கொள்ளவில்லை' என்பார். அதற்கு அவர்கள் எப்பொழுது நீர் பசியாகவோ, தாகமாகவோ நோயுற்றோ, சிறையிலோ இருக்கக் கண்டு தொண்டு செய்யாது இருந்தோம் என கேட்பார்கள்.

அப்பொழுது அவர் 'மிகச் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதை எல்லாம் செய்யவில்லையோ அதை எனக்கும் செய்யவில்லை என் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் எனப் பதிலளிப்பார். இவை எம் முன்னே பல தேவைகளுடன் எம்மை அணுகுகின்ற போதும், அதனை தெரிந்தும் ஒதுங்கி வாழும் நிலையிலும் நாமும் தவறியிருக்கின்றோம். இத்தவக் காலத்தில் அத் தவறை உணரவும் அதற்காக மன்னிப்புப் பெற்று மனம் மாறி தேடிச் சென்று உதவும் மனிதர்களாக சிறுசிறு செய்களால் தவப் பயணத்தை அர்த்தமுள்ள தாக்க அழைக்கப்படுகிறோம் என்பதை உணர்ந்து பயணிப்போம்!

- செ.யோசப்பாலா -

## அரசாங்க அறிவித்தல்

# பகிரங்க ஏலவிற்பனை

### மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

மாவட்டச் செயலகம்,தகவல் தொழிநுட்ப பூங்கா மற்றும் கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேச செயலகங்களின் அலுவலகப் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட தளபாடங்கள், வளிபதனாக்கிகள், கணினிகள், பிரிண்டர்கள், ரயர்கள், மின்சார உபகரணங்கள், கட்டடங்களிலிருந்து அகற்றப்பட்ட பொருள்கள் என்பன பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏல விற்பனையில் பொருள்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் நாவற்குழி அரச களஞ்சியசாலை மற்றும் உரிய அலுவலகங்களில் ஏலவிற்பனை நடைபெறும் நாளுக்கு முதல் வேலை நாளில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 1.00 மணி வரை பொருள்களைப் பார்வையிடலாம். ஏல விற்பனையில் பொருள்களைப் பெறுகின்றவர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் ஏல விற்பனைக்குரிய காசாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் (பொது 172) பெற்று அன்றையதினம் மாலை 4.00 மணிக்கு முன்னர் பொருள்களை அவ்விடங்களில் இருந்து அகற்றுதல் வேண்டும்.

| இல | அலுவலகம் | ஏலவிற்பனை நடைபெறவுள்ள திகதி | நேரம் | ஏலவிற்பனை நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01 | பிரதேசசெயலகம் - காரைநகர் | 18/03/2019 திங்கட்கிழமை | மு.ப 09.30 | பி.செ காரைநகர் |
| 02 | பிரதேசசெயுலகம் - கோப்பாய் | 18/03/2019 திங்கட்கிழமை | மு.ப 10.30 | பி.செ கோப்பாய் |
| 03 | பிரதேசசெயலகம் - நல்லூர் | 18/03/2019 திங்கட்கிழமை | மு.ப 11.00 | பி.செ நல்லூர் |
| 04 | பிரதேசசெயலகம் - தெல்லிப்பளை | 19/03/2019 செவ்வாய்க்கிழமை | மு.ப 09.00 | பி.செ தெல்லிப்பளை |
| 05 | பிரதேசசெயலகம் - வேலணை | 19/03/2019 செவ்வாய்க்கிழமை | மு.ப 09.00 | பி.செ வேலணை |
| 06 | பிரதேசசெயலகம் - ஊர்காவற்றுறை | 19/03/2019 செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | பி.செ ஊர்காவற்றுறை |
| 07 | பிரதேசசெயலகம் - உடுவில் | 19/03/2019 செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | பி.செ உடுவில் |
| 08 | பிரதேசசெயலகம் - யாழ்ப்பாணம் | 19/03/2019 செவ்வாய்க்கிழமை | மு.ப 11.00 | பழையயாழ்ப்பாணம் பிரதேசசெயலக கட்டடம் |
| 09 | பிரதேசசெயலகம் - சங்கானை | 21/03/2019 வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ சங்கானை |
| 10 | பிரதேசசெயலகம் - நெடுந்தீவு | 21/03/2019 வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ நெடுந்தீவு |
| 11 | பிரதேசசெயலகம் - பருத்தித்துறை | 21/03/2019 வியாழக்கிழமை | மு.ப 11.00 | பி.செ பருத்தித்துறை |
| 12 | பிரதேசசெயலகம் - சண்டிலிப்பாய் | 21/03/2019 வியாழக்கிழமை | மு.ப 11.00 | பி.செ சண்டிலிப்பாய் |
| 13 | பிரதேசசெயலகம் - சாவகச்சேரி | 21/03/2019 வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ சாவகச்சேரி |
| 14 | தகவல் தொழிநுட்ப பூங்கா- யாழ்ப்பாணம் | 22/03/2019 வெள்ளிக்கிழமை | மு.ப 10.00 | தகவல் தொழிநுட்பபூங்கா, யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்க கட்டடம் |
| 15 | பிரதேசசெயலகம் - மருதங்கேணி | 22/03/2019 வெள்ளிக்கிழமை | மு.ப 10.00 | பி.செ மருதங்கேணி |
| 16 | பிரதேசசெயலகம் - கரவெட்டி | 22/03/2019 வெள்ளிக்கிழமை | பி.ப. 02.30 | பி.செ கரவெட்டி |
| 17 | மாவட்டச் செயலகம்- யாழ்ப்பாணம் | 28/03/2019 வியாழக்கிழமை | மு.ப. 09.30 | நாவற்குழிஅரச களஞ்சியசாலை |

**நா.வேதநாயகன்**
**அரசாங்க அதிபர்,**
**யாழ் மாவட்டம்.**

காலைக்கதிர்
Kalaikathir


# இந்தியப் பொதுத்தேர்தல் இம்முறை 7 கட்டங்களாக தமிழகத்தில் ஏப்ரல் 18; வாக்கு எண்ணிக்கை மே 23

புதுடில்லி,மார்ச் 12

உலகின் மிகப்பெரிய ஜனநாயகச் செயற்பாடு எனக் கருதப்படும் இந்திய நாடாளுமன்றத் தேர்தல் வரும் ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி முதல் மே மாதம் 19 ஆம் திகதி வரை 7 கட்டங்களாக நடைபெறுகிறது.

தமிழ்நாட்டில் ஏப்ரல் 18 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெறும். வேட்புமனுத் தாக்கல் வருகிற 19 ஆம் திகதி தொடங்குகிறது.

தற்போதைய 16 ஆவது நாடாளுமன்றத்தின் பதவி காலம் வருகிற ஜூன் 3 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இதைத்தொடர்ந்து, 17 ஆவது நாடாளுமன்ற தேர்தல் திகதி நேற்று முன்தினம் மாலையில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்தியத் தலைமை தேர்தல் ஆளுநர் சுனில் அரோரா நேற்று முன்தினம் மாலை டில்லியில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் நாடாளுமன்றத் தேர்தல் அட்டவணையை வெளியிட்டார். அப்போது தேர்தல் ஆணையாளர்கள் சுஷில் சந்திரா, அசோக் லாவசா ஆகியோர் உடன் இருந்தனர்.


அதன்படி, இந்தியா முழுவதும் உள்ள 543 நாடாளுமன்ற தொகுதிகளுக்கும் ஏப்ரல் 11 ஆம் திகதி தொடங்கி மே மாதம் 19 ஆம் திகதி வரை 7 கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது.

கடந்த 2014 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது 9 கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

முதல் கட்ட தேர்தல் நடைபெறும் ஏப்ரல் 11அன்று 20 மாநிலங்க ளைச் சேர்ந்த 91 தொகுதிகளுக்கு நடைபெறுகிறது.

ஏப்ரல் 18 பெறும் 2 ஆம் கட்ட தேர்தலில் 13 மாநிலங்களைச் சேர்ந்த 97 தொகுதிகளில் வாக்குப்பதிவு இடம் பெறும்.

3 ஆவது கட்டத் தேர்தல் நடைபெறும் ஏப்ரல் 23 ஆம் திகதி 14 மாநிலங்களில் உள்ள 115 தொகுதிகளிலும், 4 ஆவது




கட்டத் தேர்தல் நடைபெறும் ஏப்ரல் 29 ஆம்தி 9 மாநிலங்களில் உள்ள 71தொகுதிகளிலும், 5 ஆவது கட்டத் தேர்தல் நடைபெறும் மே 6 ஆம் திகதி 7 மாநிலங்களில் உள்ள 51 தொகுதிகளிலும், 6 ஆவது கட்டத் தேர்தல் நடைபெறும் மே 12 ஆம் திகதி 7 மாநிலங்களில் உள்ள 59 தொகுதிகளிலும் வாக்குப் பதிவு நடைபெறும்.

இறுதியில் 7 ஆவது கட்டமாக மே 19 ஆம் திகதி 8 மாநிலங்களில் உள்ள 59 தொகுதிகளிலும் தேர்தல் நடைபெறுகிறது.

தமிழ்நாட்டிலும், புதுச்சேரியிலும் 2 வது கட்டமாக தேர்தல் நடைபெறுகிறது.

அதாவது, தமிழ்நாட்டில் உள்ள 39 நாடாளுமன்ற தொகுதிகளுக்கும், புதுச்சேரியில் உள்ள ஒரு தொகுதிக்கும் ஏப்ரல் 18 ஆம் திகதி (வியாழக்கிழமை) ஒரே நாளில் தேர்தல் நடைபெறுகிறது.

அன்றைய தினமே தமிழக சட்டசபையில் காலியாக இருக்கும் 21 சட்டசபை தொகுதிகளில் 18 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடைபெறும்.

நாடு முழுவதும் காலியாக இருக்கும் மொத்தம் 34 சட்டசபை தொகுதிகளுக்கும் இந்தப் பொதுத்தேர்தலுடனேயே இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

தமிழகம், புதுச்சேரியில் நாடாளுமன்ற தேர்தல் மற்றும் தமிழகத்தில் காலியாக இருக்கும் 18 சட்டசபை தொகுதிகளுக்குமான இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் வருகிற 19 ஆம் திகதி தொடங்குகிறது.

மனுதாக்கல் செய்ய 26 ஆம் திகதி கடைசி நாள். வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை 27 ஆம் திகதி நடைபெறும். போட்டியில் இருந்து விலக விரும்புவோர் தங்கள் வேட்புமனுக்களை வாபஸ் பெற 29ஆம் திகதி கடைசி நாள் ஆகும். அன்றே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும். தமிழ்நாட்டில் வாக்குப் பதிவு ஏப்ரல் 18 ஆம் திகதி நடைபெறும்.

நாடு முழுவதும் உள்ள 90 கோடி வாக்காளர்கள் பங்கேற்கும் 7 கட்ட தேர்தல் முடிவடைந்ததும், மே மாதம் 23 ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்படும்.

நாடாளுமன்றத் தேர்தலுக்காக நாடு முழுவதும் 10 லட்சத்து 35 ஆயிரம் வாக்குச் சாவடிகள் அமைக்கப்படுகின்றன. யாருக்கு வாக்களித்தோம் என்பதை வாக்காளர்கள் உறுதி செய்து கொள்ள வகை செய்யும் எந்திரம் (வி.வி.பி. ஏ.டி) இந்தத் தேர்தலில் எல்லா வாக்குச்சாவடிகளிலும் வைக்கப்படும்.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நாடு முழுவதும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக ந்டைமுறைக்கு வந்துள்ளன என்றும் சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் அனைத்து அரசியல் விளம்பரங்களுக்கும் முன்கூட்டியே அனுமதிச் சான்றிதழ் பெற வேண்டும் என்றும் தலைமை தேர்தல் ஆணையாளர் சுனில் அரோரா கூறினார்.

ஆந்திரா, ஒடிசா, அருணாசலப்பிரதேசம், சிக்கிம் ஆகிய 4 மாநில சட்டசபைகளுக்கும் நாடாளுமன்ற தேர்தலுடன் சேர்த்து தேர்தல் நடத்தப்படும் என்று தலைமை தேர்தல் ஆணையர் சுனில் அரோரா அறிவித்து உள்ளார்.

**தமிழகத்தில் தேர்தல் அட்டவணை வருமாறு:-**

வேட்புமனு தாக்கல் ஆரம்பம் - மார்ச் 19.

மனு தாக்கல் செய்ய கடைசி நாள் - மார்ச் 26.

மனுக்கள் மீது பரிசீலனை - மார்ச் 27.

மனுவை வாபஸ் பெற கடைசி நாள்- மார்ச் 29.

வாக்குப்பதிவு - ஏப்ரல் 18.

வாக்கு எண்ணிக்கை - மே 23.

# ராகு காலத்தில் தேர்தல் அறிவிப்பு கலக்கத்தில் சில அரசியல் கட்சிகள்!

இந்தியப் பொதுத் தேர்தல் திகதி ராகு காலத்தில் அறிவிக்கப்பட்டதால் சில அரசியல் கட்சிகள் கலக்கம் அடைந்துள்ளன.

மத நம்பிக்கை உள்ளவர்கள் பொதுவாக ராகு கால நேரத்தில் நல்ல காரியங்களைத் தொடங்க மாட்டார்கள். பல்வேறு அரசியல் கட்சிகளும், கட்சிகளின் தலைமைகளும் இதற்கு விதிவிலக்கு அல்ல.

கூட்டணி அறிவிப்பைக் கூட நல்ல நாள், நேரம் பார்த்துதான் பல அரசியல் கட்சிகள் வெளியீடுகின்றன. கடந்த ஆண்டு தெலங்கானா சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் முதல்வர் ஆன சந்திரசேகர ராவ், நல்ல நாள் பார்த்து டிசம்பர் 13ஆம் திகதியன்று பதவியேற்றார். முன்கூட்டியே தேர்தல் நடத்துவதற்கு வசதியாக நல்ல நாள் பார்த்து, அந்தத் திகதிக்காக காத்திருந்து, அதற்கேற்ற வகையில்தான் சட்டப்பேரவையைக் கலைப்பதற்கு ஆளுநருக்கு சிபாரிசு செய்ய சந்திரசேகர ராவ் முடிவு செய்தார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆந்திர மாநிலம் பிரிவினைக்கு பின் மீண்டும் முதல்வராக பதவியேற்ற சந்திரபாபு நாயுடுவும் ஜோதிடர்கள் குறித்துக் கொடுத்த நேரத்தில் இரவு சரியாக 7.27 மணிக்கு பதவியேற்றார். முன்னாள் பிரதமர் தேவகவுடாவும் தனது குடும்ப ஜோதிடரை கலந்து ஆலோசித்த பிறகுதான் முக்கிய முடிவுகளை எடுப்பார். கர்நாடக ஆளுநர் வஜுபாய் வாலாவும் ஜோதிடத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர்.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமையான நேற்று முன்தினம் மாலை 4.30 மணி முதல் 6 மணி வரையிலான ராகு கால நேரத்தில் மாலை 5 மணிக்கு மக்களவைத் தேர்தலுக்கான அறிவிப்புகளை தலைமைத் தேர்தல் ஆணையர் வெளியிட்டார். ராகு கால நேரத்தில் தேர்தல் அறிவிப்பை வெளியிட்டதால் பல கட்சிகள் கலக்கத்தில் உள்ளன.

தென் மாநிலங்களைச் சேர்ந்த சில அரசியல்வாதிகள் ராகு கால நேரத் தில் தேர்தல் அறிவிப்பை வெளியிடுவதற்கு பதிலாக வேறு நேரத்தில் வெளியிட வேண்டும் என்று விரும்பினர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தென் மாநிலத்தைச் சேர்ந்த ஆளுநர் ஒருவரும் இதையே விரும்பினார். ஆனாலும் முன்னர் திட்டமிட்டபடி, தேர்தல் ஆணையம் நேற்று மாலை 5 மணிக்கு ராகு கால நேரத்தில் தேர்தல் திகதியை வெளியிட்டது.

# லண்டனில் இந்திய தூதரகம் முன் ஆர்ப்பட்டத்தின்போது கைகலப்பு



லண்டன்,மார்ச்12

இங்கிலாந்தில் உள்ள இந்தியத் தூதரகம் எதிரே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது காஷ்மீர் மற்றும் காலிஸ்தான் பிரிவினைவாதிகளுக்கும், இந்திய ஆதரவாளர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது.

பிரிட்டனைச் சேர்ந்த காஷ்மீரி மற்றும் காலிஸ்தான் அமைப்பினர், தலைநகர் லண்டனில் அமைந்துள்ள இந்தியத் தூதரகம் முன் கடந்த சனிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது இந்தியாவுக்கு எதிராக அவர்கள் கோஷங்கள் எழுப்பினர். இந்த நிலையில், இந்திய நண்பர்கள் சங்கம் உள்ளிட்ட அமைப்பைச் சேர்ந்தவர்கள் பிரிவினைவாத ஆதரவாளர்களுக்குப் போட்டியாக அதே பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது அவர்கள் இந்தியாவுக்கும், பிரதமர் நரேந்திர மோடிக்கும் ஆதரவாக கோஷங்களை எழுப்பினர்.

அமைதியான முறையில் நடைபெற்றுக் கொண்டிருந்த அந்த ஆர்ப்பாட்டத்தில், திடீரென இரு தரப்பினருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. இந்த தகவலை ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டார் என லண்டன் மாநகர பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தியாவுக்கு எதிராக நடைபெற்ற அந்த ஆர்ப்பாட்டத்தில், வெளிநாட்டு வாழ் பாகிஸ்தானியர்கள் நல கவுன்சில், சீக்கியர்களுக்கான நீதி அமைப்பு உள்ளிட்ட அமைப்பினர் கலந்து கொண்டனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அந்தமானில் நிலநடுக்கம்



*போர்ட் பிளேயர், மார்ச்12*

*இந்தியாவின் அந்தமான் தீவுகளில் நேற்றுக்காலை இலேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. நேற்றுக் காலை 6.44 மணியளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் அதிர்ந்தன.*

*இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 4.8 ஆக பதிவாகியுள்ளது. நிலநடுக்கத்தால் சேதம் எதுவும் ஏற்பட்டதா என்பது குறித்து தற்போது வரை எந்தத் தகவலும் வரவில்லை.*

# எதியோப்பியாவில் பயணிகள் விமானம் வீழ்ந்து நொறுங்கியதில் 157 பேர் சாவு





எதியோப்பியாவில் இருந்து புறப்பட்ட பயணிகள் விமானம் மேலெழுந்த கையோடு விழுந்து நொறுங்கியதில் 157 பேரும் உயிரிழந்தனர்.

எத்தியோப்பிய தலைநகர் அடிஸ் அபாபாவில் இருந்து 'எதியோப்பியன் ஏர்லைன்ஸ்' விமான நிறுவனத்துக்குச் சொந்தமான 'போயிங் 737-800 மேக்ஸ்' ரக விமானம் நேற்று முன் தினம் காலை 8.38 மணிக்கு கென்ய தலைநகர் நைரோபிக்குப் புறப்பட்டது. சிவீ 302 என்ற எண் கொண்ட அந்த விமானத்தில் 149 பயணிகளும், 8 விமானப் பணிக்குழுவினரும் இருந்தனர். இந்நிலையில் புறப்பட்ட 6 நிமிடங்களுக்குள்ளாகவே விமானம் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது.

விமானம் விபத்துக்குள்ளாகி தரையில் விழுந்ததாக அந்நாட்டு அரசு உறுதிப்படுத்தியுள்ளது. விமானம் எத்தியோபியாவின் தலைநகர் அடிஸ் அபாபாவில் இருந்து தென் கிழக்கே உள்ள பிஸோஃப்ட்; என்ற நகருக்கு அருகே விழுந்தது.

விமானம் பயங்கர சத்தத்துடன் அருகில் நெருங்க முடியாத அளவுக்குத் தீப்பிடித்து எரிந்ததாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். சுமார் 3 மணி நேரத்துக்குப் பின்பே சம்பவ இடத்துக்குத் தீயணைப்பு வாகனங்கள், அம்புலன்ஸ்கள் வந்து சேர்ந்தன எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

விமானத்தில் பயணித்த 157 பேரும் உயிரிழந்துவிட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதில், 33 நாடுகளைச் சேர்ந்தவர்கள் பயணித்தமையும் விமான நிறுவனம் தரப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான விமானம் கடந்த 3 மாதங்களுக்கு முன்புதான் எத்தியோபியன் ஏர்லைன்ஸ் விமான நிறுவனத்தால் வாங்கப்பட்டது என 'த பிலேன் ஸ்பாட்டர்ஸ்' எனும் உள்நாட்டு விமானப் போக்குவரத்து தகவல் மையம் தெரிவித்துள்ளது.

எதியோப்பியா பிரதமர் அபிய் அஹ்மத் விமான விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு அந்நாட்டு மக்கள் சார்பிலும், அரசின் சார்பிலும் தாம் இரங்கல் தெரிவிக்கிறார் என டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இதனிடையே கென்யா மற்றும் அடிஸ் அபாபா விமான நிலையங்களில் உறவினர்கள் கண்ணீரோடு குவிந்திருந்தனர்.

## 24 மணி நேரத்தில் 60 தலிபான்கள் பலி என்கிறது ஆப்கன் இராணுவம்



காபூல், மார்ச்12

ஆப்கன் இராணுவம் மேற்கொண்ட அதிரடி இராணுவ நடவடிக்கையில் 24 மணி நேரத்தில் 60 தலிபான் தீவிரவாதிகள் கொன்று குவிக்கப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானில் ஆதிக்கம் செலுத்தி வரும் தலிபான் தீவிரவாதிகளை ஒடுக்க அமெரிக்கப் படையின் உதவியோடு ஆப்கன் இராணுவம் கடுமையாகப் போராடி வருகிறது.

இந்த நிலையில் லாகர், வார்டாக், பாக்டிகாக் ஆகிய மாகாணங்களில் தலிபான் பயங்கரவாதிகளின் நிலைகளைக் குறிவைத்து வான்வழியாகவும், தரைவழியாகவும் ஆப்கன் இராணுவத்தினர் அதிரடித் தாக்குதலில் ஈடுபட்டனர்.


போர் விமானங்கள் இடைவிடாது குண்டு மழை பொழிந்ததில் தீவிரவாதிகளின் பதுங்கு குழிகள் நிர்மூலமாக்கப்பட்டன.

அத்துடன் தலிபான்களுக்கான வானொலிக் கோபுரம் மற்றும் அவர்களின் ஆயுதக்கிடங்குகளும் அழிக்கப்பட்டன.

இந்த அதிரடித் தாக்குதலில் 24 மணி நேரத்தில் 60 தீவிரவாதிகள் கொன்று குவிக்கப்பட்டனர். இந்தத் தகவலை ஆப்கன் இராணுவம் தெரிவித்தது.

## கொலம்பியாவிலும் விமானம் நொறுங்கியது அதில் இருந்த 14 பேரும் பரிதாபமாகப் பலி

போகோடா,மார்ச்12



கொலம்பியாவிலும் விமானம் ஒன்று தரையில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 14 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கொலம்பியாவின் அமேசான் பிராந்தியத்தில் உள்ள சான் ஜோஸ் டெல் குவாவிரே நகரில் இருந்து வில்லாவிசென்சியோ நகருக்கு 'டிசி-3' ரக பயணிகள் விமானம் புறப்பட்டுச் சென்றது. இதில் 9 பயணிகளும், 2 விமானிகளும், விமான ஊழியர் 3 பேரும் இருந்தனர்.

மேடா மாகாணத்தில் உள்ள லா பெண்டி ரிசோன் நகருக்கு அருகே நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது, திடீரென விமானியின் கட்டுப்பாட்டை இழந்த விமானம் தரையில் விழுந்து நொறுங்கியது.

இந்தக் கோர விபத்தில் விமானத்தில் இருந்த 14 பேரும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிர் இழந்தனர். விபத்துக்கான காரணம் என்ன என்பது உடனடியாக தெரியவில்லை. இது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

## ஏமனில் வாரம் 100 பேர் பலி!

ஏமனில்நடக்கும்உள்நாட்டுப்போரில் கடந்த வருடம் மட்டும் பொதுமக்கள் 4ஆயிரத்து 800 பேர் கொல்லப்பட்டு இருக்கின்றனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஐ. நா. சபை தரப்பில், உலக அகதிகள் அமைப்பின் சார்பில் வியாழக்கிழமை தரவு ஒன்று வெளியிடப்பட்டது. அதில் கடந்த 2018 ஆம் ஆண்டில் ஏமனில் நடக்கும் உள்நாட்டுப் போர் காரணமாக 4,800 பொதுமக்கள் இறந்திருக்கிறார்கள். ஒவ்வொரு வாரமும் பொதுமக்களில் 100 பேர் உயிரிழந்திருக்கின்றனர் அல்லது காயமடைந்திருக்கின்றனர் என்று தெரிவித்துள்ளது.



ஏமனில் நடந்து வரும் உள்நாட்டு போரை நிறுத்த ஐக்கிய நாடுகள் சபை நீண்ட காலமாக பேச்சு நடத்தி வருகிறது. இந்தநிலையில் பல்வேறு பேச்சுகளுக்குப் பிறகு போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு அரசும், ஹவுத்தி கிளர்ச்சியாளர்களும் கடந்த மாதம் மீண்டும் ஒப்பு கொண்டனர்.

தென்மேற்கு ஆசிய நாடான ஏமன் நாட்டில் சன்னி பிரிவைச் சேர்ந்த அதிபர் மன்சூர் ஹைதிக்கும் ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கும் இடையே கடந்த 2015 மார்ச் முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. இதில் அதிபர் மன்சூர் ஹைதிக்கு ஆதரவாக சவுதி அரேபியா செயல்படுகிறது. ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது.

## எண்ணெய் வள நாடான வெனிசூலாவில் மின்வெட்டால் 15 நோயாளிகள் மரணம்

### பின்னணியில் அமெரிக்கச் சதி என்கிறார் அதிபர் நிகோலஸ்

கராகஸ்,மார்ச்12

வெனிசூலாவில் மின் இணைப்பு துண்டிப்பால் சிகிச்சை பெற முடியாமல் 15 நோயாளிகள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

எண்ணெய்வளம்மிக்கநாடான வெனிசூலா பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கிறது. மற்றொரு புறம் அதிபர் நிகோலஸ் மதுரோமீதானசர்வதேசநாடுகளின் எதிர்ப்பு வலுப்பெற்று வருகிறது.



இந்த நிலையில், கடந்த இரு தினங்களுக்கு முன்பு வெனிசூலா முழுவதும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு நாடே இருளில் மூழ்கியது. இதன் பின்னணியில் அமெரிக்காவின் சதி இருப்பதாக அதிபர் நிகோலஸ் மதுரோ குற்றம் சாட்டுகிறார்.

மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதால் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள். குறிப்பாக முதியவர்கள், குழந்தைகள் மற்றும் நோயாளிகள் கடும் இன்னலை அனுபவித்து வருகிறார்கள். இந்த நிலையில், மருத்துவமனையில் மின்சாரம் இல்லாததால் 'டயாலிசிஸ்' சிகிச்சை பெறமுடியாமல் 2 நாள்களில் 15 நோயாளிகள் உயிர் இழந்த சம்பவம் அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. நாடு முழுவதும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளிகள் 'டயாலிசிஸ்' சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், மின் விநியோகத்தில் இதே நிலை நீடித்தால் அவர்கள் உயிர் இழப்பதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் சுகாதார உரிமைகள் குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikathir






# நுண்கடன் திட்டம்:

# குடும்பச் சீரழிவுகளை தடுக்க தாமதம் ஏன்?

## செயலில் இறங்குமா மத்திய வங்கி?

மூன்று தசாப்த போரின் பிடிக்குகள் சிக்கி, பல சவால்களுக்கு மத்தியில் தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீண்டும் மீள்குடியேறியுள்ள மக்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் சுரண்டல் செயற்பாடுகள் கேட்பாரற்று தொடர்கின்றன. இந்நிலையில் நுண்கடன் நிதி நிறுவனங்களிடம் சித்திரவதைப்படும் பெண்களின் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என வலியுறுத்தி வவுனியா பிரதேச செயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் ஒன்றியம், வவுனியா நகர சிறுவியாபாரிகள் சங்கம், பசுமை தொழிலாளர் நலன்புரி சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

குறிப்பாக வடக்கு மாகாண மக்களை இலக்குவைத்து அனுமதியற்ற தென்பகுதி நிதி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் முறையற்ற கடன் வழங்கல் நடவடிக்கையால் பலர் தற்கொலை செய்யும் நிலைமையும் ஏற்பட்டிருக்கின்றது.

அனுமதியற்ற நுண்கடன் வழங்கும் நிறுவனங்கள், மீள்குடியேறிய மக்களின் வறுமை மற்றும் வாழ்வில் முன்னேறத் துடிக்கும் முயற்சிகளை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திவருகின்றமை கவலைக்குரிய ஒன்றாக தற்போது மாறியுள்ளது.

இந்த சந்தர்ப்பங்களை தமக்கு சாதமாக பயன்படுத்தும் அனுமதியற்ற நுண்கடன் வழங்கும் நிறுவனங்கள் நிர்ணயிக்கப்பட்ட வட்டிவீதங்களை விட அதிக வட்டிக்கு மக்களுக்கு கடன்களை வழங்கி, அவர்களை மீளமுடியாத துயருக்குள் தள்ளிவிடுகின்றன.

இந்த நுண்கடன்களால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட சமூக பிரச்சினைகள் கடந்த காலங்களில் வலுவடைந்த நிலையில், அது குறித்து ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.



எனினும் இந்த கடன் வழங்கல் நடவடிக்கையால் குடும்பங்களிடையே பல பிரச்சினைகள் உருவாகியிருந்த நிலையில், இது குறித்து ஆய்வுகளை மேற்கொள்வதற்காக கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி வட மாகாணத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

இந்த விஜயத்தின் போது மத்திய வங்கியின் கிளிநொச்சி பிரதேச அலுவலகத்தில் வைத்து வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் இயங்கும் கிராம மட்ட அமைப்புக்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட ஏனையவர்களைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். அனுமதியற்ற நுண்கடன் வழங்கும் நடவடிக்கையால் வறுமைப்பட்ட மக்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் குடும்பங்களிடையே பிளவுகள் ஏற்பட்டுள்ளன என்றும் மாதர் சங்க பிரதிநிதிகள் இதன்போது சுட்டிக் காட்டியிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை பெயரே அறியாத சிங்களப் பெயர் கொண்ட நிதி நிறுவனங்கள் முறையற்ற விதத்தில் கடன்களை வழங்கிவருகின்றமை ஆய்வொன்றில் கண்டறியப்பட்டமை தொடர்பில் இந்த கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

தற்போது கட்டுப்பாடுகள் இன்றி இயங்கும் நிதி நிறுவனங்கள் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கான வழிமுறையா என மக்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

புலிகளின் நிர்வாகத்தின் கீழ் கடன் பெறுவதிலும் ஓர் கட்டமைப்பு பேணப்பட்ட போதிலும் தற்போது அனைத்து வளங்களையும் சட்டங்களையும் வைத்துள்ள அரசினால் ஏன் அவ்வாறு செய்ய முடியாதுள்ளது எனவும் அவர்கள் வினவினர்.

மக்களின் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்த மத்திய வங்கியின் ஆளுநர், கடன் வழங்கலை நிறுத்த முடியாது என்ற போதிலும் எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கு மக்களிடம் இருந்து யோசனைகளை கோரியிருந்தார்.

எனினும் இதுவரை இதனைத் தடுப்பதற்கோ அல்லது அதிலிருந்து மக்களை விடுவிப்பதற்கோ உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு அது செயற்படுத்தப்படவில்லை.

மீள்குடியேறியுள்ள மூக்களின் வாழ்வாதாரத்தை மாத்திரமல்லாமல், ஒட்டுமொத்த குடும்ப சூழலையே சின்னாபின்னமாக்கும் இந்த நுண்கடன் வழங்கல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்த வேண்டிய கடப்பாடு இலங்கை மத்திய வங்கிக்கு உரியது.

எவ்வாறாயினும் போரினால் அனைத்தையும் இழந்து அடிப்படையிலிருந்து தமது வாழ்வை மீளக்கட்டியெழுப்பி வரும் மக்களை நுண்கடன் பிரச்சினையிலிருந்தும் தற்கொலை போன்ற செயற்பாடுகளிலிருந்தும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இலங்கை அரசாங்கத்துக்கு காணப்படுகின்றது. *

> வடக்கு மாகாண மக்களை இலக்குவைத்து அனுமதியற்ற தென்பகுதி நிதி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் முறையற்ற கடன் வழங்கல் நடவடிக்கையால் பலர் தற்கொலை செய்யும் நிலைமையும் ஏற்பட்டிருக்கின்றது.



கடந்த ஞாயிறன்று பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பு மற்றும் காரைநகர் சமூக மேம்பாட்டுக் கழகம் ஆகிய அமைப்புக்களின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் தேசிய கலை இலக்கியப் பேரவையில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தின விசேட பொதுக் கூட்டத்தின் காட்சிகள் சில... (இ)

## சிவனொளிபாத மலைக்குச் சென்றவர் கடும் குளிரால் உயிரிழப்பு

மஸ்கெலியா, மார்ச் 12

கடும் குளிர் காரணமாக சிவனொளிபாத மலை யாத்திரை செய்த யாத்திரிகர் ஒருவர் சிவப்பு அம்பளம் பகுதியில் நேற்று அதிகாலை 4.30 மணி அளவில் மரணமடைந்துள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மரணமடைந்தவர் பதுளை, கெந்தகொல்ல பகுதியைச் சேர்ந்த வயது 53 ஜே.எம். தர்மகீர்த்தி என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர் சிவனொளிபாதமலை தரிசிப்பதற்காக சென்றபோது கடும் குளிர் காரணமாக நெஞ்சு வலியால் அவதியுற்று வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு முயற்சிகள் மேற்கொண்ட நிலையில் இறந்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

இவரது சடலம் வைத்திய பரிசோதனைக்காக மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக மலையகத்தில் சில பகுதிகளில் பல்வேறு இடங்களில் கடும் வறட்சியுடன் கடும் குளிர் நிலவி வருவதும் குறிப்பிடத்தக்கது.

## இரு வர்த்தக நிலையங்கள் நுவரெலியாவில் தீக்கிரை!





நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா – கண்டி பிரதான வீதி, பழையக் கடை பகுதிக்குச் செல்லும் வழியிலுள்ள இரு வியாபார நிலையங்களில் ஏற்பட்ட திடீர் தீ விபத்து காரணமாக, அந்நிலையங்கள் முற்றுமுழுதாகத் தீக்கிரையாகியுள்ளன.

திடீர் தீ விபத்தில் அணிகலன்கள் விற்பனை நிலையமொன்றும், புதிதாக திறக்கப்படவிருந்த உணவகமொன்றுமே நேற்று இவ்வாறு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

இத் தீவிபத்தில் எவருக்கும் உயிராபத்தோ காயங்களோ ஏற்படவில்லை எனினும் பொருள்கள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

பிரதேச பொது மக்கள், நுவரெலியா பொலிஸார், மாநகரசபையின் தீயணைப்பு பிரிவினர் ஆகியோர் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். எனினும் பொருள்கள் மற்றும் ஆவணங்கள் என அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன.

தீ ஏற்பட்டதற்கான காரணம் கண்டறியப்படவில்லை. மின்சார ஒழுக்குக் காரணமாக இத் தீ ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 3 துப்பாக்கிகளுடன் ஒருவர் எட்டியாந்தோட்டையில் கைது

எட்டியாந்தோட்டை – கபுலுமுல்ல பிரதேசத்தில் வீடு ஒன்றிலிருந்து 3 துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எட்டியாந்தோட்டை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபரிடமிருந்து அனுமதிப்பத்திரமின்றி வைத்திருந்த துப்பாக்கி ஒன்றும், கட்டு துப்பாக்கி ஒன்றும், ஷொட் கன் ஒன்றும், துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட 63 வயதுடைய சந்தேக நபர் ருவான்வெல்ல நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது, இன்று 12ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை எட்டியாந்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பயணப் பொதிக்குள் துப்பாக்கி கட்டுநாயக்காவில் ஒருவர் கைது

பயணப்பொதியில் துப்பாக்கியை மறைத்து வைத்து வெளிநாடு கொண்டு செல்ல முயன்ற பயணியொருவர் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட இந்நபர் லண்டன் நோக்கிச் செல்வதற்காக வந்தவர் எனக் கூறப்படுகின்றது.

வெல்லம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த இந்தச் சந்தேகநபர் அமெரிக்கக் குடியுரிமையைக் கொண்டவரெனவும், இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளுக்காக விமான நிலையப் பொலிஸாரிடம் அவர் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மன்னாரில் இலங்கைக் கடற்படையினருடன் இந்திய எல்லை வரை சென்ற சீனத் தூதுவர்!

மன்னார், மார்ச் 12

இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் ஷியுவான் தலைமையிலான சீன அதிகாரிகள் குழு, தலைமன்னார் இறங்குதுறைப் பகுதி மற்றும், இந்திய எல்லைப் பகுதியில் உள்ள மணல்திட்டுகளைச் சென்று பார்வையிட்டுள்ளது.

சீனத் தூதுவர் செங் ஷியுவான் மற்றும் ஆறு சீன தூதரக அதிகாரிகள் கடந்த 5ஆம், 6ஆம் திகதிகளில் வடக்கில் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது, கடந்த 6ஆம் திகதி தலைமன்னாரில் உள்ள வடமேற்குப் பிராந்திய கடற்படைத் தலைமையகத்துக்குச் சென்றிருந்த சீன அதிகாரிகள் குழு, அங்கு இலங்கைக் கடற்படையினருடன் பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

இதன்போது, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள பாக்கு நீரிணையில் இலங்கைக் கடற்படையின் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் குறித்து சீன அதிகாரிகள் கேட்டறிந்து கொண்டனர்.

அதையடுத்து, தலைமன்னார் இறங்குதுறைப் பகுதியைச் சென்று பார்வையிட்ட சீனதூதுவர் உள்ளிட்ட அதிகாரிகள், இலங்கைக் கடற்படையின் ரோந்துப் படகு மூலம், இந்திய கடல் எல்லைப் பகுதிக்கும் சென்றனர்.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் உள்ள எல்லையில் அமைந்துள்ள மணல் திட்டுகளையும் பார்வையிட்ட சீன அதிகாரிகள் அவற்றைப் படம்பிடித்துக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினால் அரசியல் கட்சிகளுக்கும் பெரும் பாதிப்பாம்

### அபாயச் சங்கு ஊதுகின்றார் மஹிந்தர்

கொழும்பு, மார்ச்12

எந்தவொரு அரசியல் கட்சியும் புதிதாக வரும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு ஆதரவு வழங்கக்கூடாது என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மாத்தறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமொன்றை நாட்டில் அவசரகால நிலைமை இருக்கின்ற போதே பயன்படுத்த முடியும். இவ்வாறிருக்கையில், இச்சட்டத்தை சாதாரண சட்ட அந்தஸ்துக்கு மாற்றுவது ஆபத்தானது.

இவ்வாறு மாற்றும் சந்தர்ப்பத்தில், நான் இப்போது கலந்துகொண்டுள்ள இது போன்ற சாதாரண கூட்டமொன்றைக் கூட நடத்த விடாமல் தடை செய்வதற்கு ஒரு சாதாரண பொலிஸ் அதிகாரிக்கு முடியுமாகின்றது.

இதனால், இச்சட்டத்தை அங்கீகரிப்பதானது ஜனநாயகத்துக்கு எதிரானது என்பது மட்டுமல்ல, அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளுக்கும் ஆபத்தானது



எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

1979 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினால் மாற்றீடு செய்யப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்தப் புதிய எதிர்ப்புச் சட்டத்தின் பாதிப்புக் குறித்தே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## புதிதாக வரும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை தோற்கடிக்க ஜே.வி.பி., ஐ.ம.சு.மு. மும்முர முயற்சி

புதிதாக வரும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற அனுமதிக்கமாட்டோம் என்று, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், ஜே.வி.பியும் சூளுரைத்துள்ளன.

பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு மாற்றீடாக, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும் முயற்சியில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தற்போதுள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தை விட ஆபத்தானது என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியிருந்தது.

தமிழ் சட்ட நிபுணர்கள் பலரும் அதே கருத்தையே வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்தநிலையில், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராக, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், ஜே.வி.பியும் கருத்துக்களை வெளியிட்டுள்ளன.

இதுதொடர்பாக, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும, கருத்து வெளியிடுகையில் –

இந்தச் சட்டத்தின் மூலம் அரசாங்கத்துக்கு எதிரான சக்திகளை இல்லாமல் அகற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது.

நாடாளுமன்றத்தில் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அனுமதிக்காது.


அரசதரப்பு உறுப்பினர்கள் பலரும், இந்தச் சட்டமூலத்தை விரும்பவில்லை. எனவே, அவர்களின் ஆதரவையும் பெற்று இந்தச் சட்டமூலத்தை தோற்கடிப்போம். என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஜே.வி. பியும், இந்தச் சட்டமூலத்துக்கு எதிராக வாக்களிக்கும், என்று ஜே.வி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்துள்ளார்.

(உ)

தொழில்சார் கற்கைகள் நிறுவனம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
➢ பட்ட, பட்ட மேற்படிப்பு பிரிவுகள் (Topup one year)
BA in English | BA in Tamil
BA in Education | BBA in Management
B.Sc in Psychology | BA in Hotel Management
B.Sc in Computer Science
➢ MA M.Sc. M.BA. M.Ed
➢ M.Phil/ Ph.D பிரிவு IV
ஆரம்பம் 16.03.2019
UGC Approved
★ Master Degree உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும்.
★ ஆய்வுச் சுருக்கம், ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிக்க வேண்டும்.
சகல போட்டிப் பரீட்சைகளுக்குமான பிரிவுகள் நடைபெறுகின்றன. பொது அறிவு : கமலதாசன், நுண்ணறிவு : தவசேகர், FR, EB: பிரபல விரிவுரையாளர்.
IPS முகாமைத்துவ நிர்வாக சபை
பல்கலைக்கழகம் அருகில், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
Email :- degreeinfo08@gmail.com 077602 1794

# கிளிநொச்சியில் சிறப்பான மாட்டு வண்டிச் சவாரி!







குறித்த போட்டியில் வெற்றிபெற்ற குழுக்களின் விவரங்கள் வருமாறு-

'அ' பிரிவில் -
முதலாமிடம் - அளவெட்டி
இரண்டாம் இடம் - மட்டுவில்
மூன்றாம் இடம் -வட்டக்கச்சி

'ஆ' பிரிவில் -
முதலாமிடம் - வட்டக்கச்சி
இரண்டாம் இடம் - அளவெட்டி
மூன்றாம் இடம் - அச்செழு

'இ' பிரிவில்-
முதலாமிடம் - அளவெட்டி
இரண்டாம் இடம் - வட்டக்கச்சி
மூன்றாம் இடம் - வட்டுக்கோட்டை

'ஈ' பிரிவில் -
முதலாமிடம் - மட்டுவில்
இரண்டாம் இடம் - அளவெட்டி
மூன்றாம் இடம் - வட்டுக்கோட்டை

'உ' பிரிவில் -
முதலாமிடம் - ரெட்பானா
இரண்டாம் இடம் - முரசுமோட்டை
மூன்றாம் இடம் - அளவெட்டி

ஆகிய இடங்களை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அக்கராயன் கமக்கார அமைப்பின் ஏற்பாட்டில் மாட்டுவண்டிச் சவாரி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்தப் போட்டி நிகழ்வு நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் அக்கராயன் சவாரித் திடலில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து 78 ஜோடிகள் இந்தப் போட்டியில் பங்குபற்றியிருந்ததுடன், அ, ஆ, இ, ஈ பிரிவுகள் என போட்டிகள் இடம்பெற்றன.

தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்கள், கலை, கலாசார விழுமியங்கள் அழிவடைந்து வரும் இக்காலப்பகுதியில், 50 வருடங்களிற்கு மேலான பாரம்பரியத்தினைக் கொண்ட மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியினை அழிய விடாது பாதுகாக்க குறித்த அமைப்பினர் முயற்சிகளை மேற் கொண்டுள்ளனர்.

எனினும் குறித்த சவாரிப் போட்டிக்கு இடத்திற்கான பல்வேறு கோரிக்கைகள் முன் வைக்கப்பட்ட நிலையிலும், சவாரி திடல்கள் வழங்கப்படவில்லை என போட்டி ஏற்பாட்டாளர்கள் கவலை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



# இந்திய அணியை துரத்தியடித்த ஆஸி.

ஆஸ்திரேலியாவுடனான 4ஆவது ஒருநாள் போட்டியில் தவான் சதமடித்தும் இந்திய அணி தோல்வியடைந்தது. ரியூனர் அதிரடியில் ஆஸ்திரேலிய அணி ஜோராக வெற்றிபெற்றது.

இந்தியா, ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 4ஆவது ஒருநாள் போட்டி சண்டிகாரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்திய அணியின் விக்கெட் காப்பாளர் டோனிக்கு ஓய்வளிக்கப்பட்டதால் பான்ட் அணியில் சேர்க்கப்பட்டார்.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் களமிறங்கிய இந்திய அணிக்கு தவான் - ரோகித் சிறப்பான ஆரம்பத்தை அளித்தனர். இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 193 ஓட்டங்களைக் குவித்தது.

ரோகித் சர்மா 95 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். மறுமுனையில் தவான் 97 பந்துகளில் சதமடித்து அசத்தினார். அவர் 115 பந்துகளில் 143 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து கோஹ்லி 7 ஓட்டங்களுடனும் ராகுல் 26 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். பின்வரிசையில் பான்ட், சங்கர் அதிரடியாக ஆட இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை யிழந்து 358 ஓட்டங்களைக் குவித்தது.

பான்ட் 36, சங்கர் 26 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக கம்மின்ஸ் 5 விக்கெட்டுக்களையும் ரிச்சட்சன் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 359 ஓட்டங்கள் என்ற கடின இலக்கை விரட்டிய ஆஸ்திரேலிய அணிக்கு தலைவர் பின்ச் ஓட்டமெதனையும் பெறாமலும் அடுத்து வந்த மார்ஷ் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.

எனினும் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த கவாஜா - ஹான்ட்ஸ் கோப் ஜோடி சிறப்பான இணையை வழங்க ஆஸ்திரேலிய அணி சரிவிலிருந்து மீண்டது.

இந்த ஜோடி 3ஆவது விக்கெட்டுக்காக 192 ஓட்டங்களைக் குவித்தது. கவாஜா 91 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மறுமுனையில் சிறப்பாக ஆடி சதமடித்த ஹான்ட்ஸ்கோப் 105 பந்துகளில் 117 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய ரியூனர் அதிரடியாக ஆடிய போதும் மறுமுனையில் மக்ஸ்வெல் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இந்திய அணியின் அனைத்துப் பந்துவீச்சாளர்களையும் நிலைகுலையச் செய்த ரியூனர் ஆஸ்திரேலிய அணியின் வெற்றியை உறுதி செய்து ஆட்டமிழந்தார்.

ரியூனர் 43 பந்துகளில் 6 சிக்ஸர்கள் 5 பவுண்டரிகள் அடங்கலாக 84 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

ஆஸ்திரேலிய அணி 47.5 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 359 ஓட்டங்களைக் குவித்து 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதன்மூலம், 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் 2-2 என சமநிலையில் உள்ளது.



# முதற் தடவையாக முன்னிலையில் பயேர்ண் மியூனிச்!

ஜேர்மனிய உதைபந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான புண்டெலிஸ்கா தொடரின் புள்ளிகள் பட்டியலில், கடந்தாண்டு செப்ரெம்பருக்குப் பின்னர் முதற் தடவையாக முதலாமிடத்துக்கு, நடப்புச் சம்பியனான பயேர்ண் மியூனிச் முன்னேறியுள்ளது.

தமது மைதானத்தில், நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வி.எவ்.எல் வொல்வ்ஸ்பேர்க்குடனான போட்டியில் வென்றதன் மூலமே, புண்டெலிஸ்கா புள்ளிகள் பட்டியலில் முதலாமிடத்துக்கு பயேர்ண் மியூனிச் முன்னேறியுள்ளது.

இப்போட்டியின் 34ஆவது நிமிடத்தில், தமது முன்கள வீரரான சேர்ஜி நர்பி, கோல் கம்பத்துக்கருகேயிருந்து பெற்ற கோலின் மூலம் முன்னிலை பெற்ற பயேர்ண் மியூனிச், அடுத்த மூன்றாவது நிமிடத்தில் இன்னொரு முன்கள வீரரான றொபேர்ட் லெவன் டோஸ்கி கோல் கம்பத்துக்கருகேயிருந்து பெற்ற கோல் காரணமாக தமது முன்னிலையை இரட்டிப்பாக்கிக் கொண்டது.

முதற்பாதியை 2-0 என்ற கோல் கணக்கில் முடித்திருந்த பயேர்ண் மியூனிச், தமது இன்னொரு முன்கள வீரரான ஜேம்ஸ் றொட்றிகாஸ், பெனால்டி பகுதியின் எல்லையிலிருந்து 52ஆவது நிமிடத்தில் பெற்ற கோலின் மூலம் 3-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

தொடர்ந்த போட்டியின் 76ஆவது நிமிடத்தில், அணித்தலைவர் தோமஸ் முல்லர் பெற்ற கோலின் மூலம் 4-0 என்ற கோல் கணக்கில் முன்னிலையைப் பெற்ற பயேர்ண் மியூனிச், அடுத்த ஆறாவது நிமிடத்தில் தமது பின்கள வீரர் ஜோஷுவா கிம்மிச் பெற்ற கோலோடும் அதற்கடுத்த மூன்றாவது நிமிடத்தில் றொபேர்ட் லெவன் டோஸ்கி பெற்ற தனது இரண்டாவது கோலோடும் 6-0 என்ற கோல் கணக்கில் பயேர்ண் மியூனிச் வெற்றிவாகை சூடியது.

(ஐ)

## ஐ.நாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போராட்டங்கள் வெடிக்கும்.

- இவ்வாறு என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா சபையில் நேற்று எச்சரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் தற்போது நடைபெற்றுவரும் வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மாவை எம்.பி. இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜெனீவா மாநாட்டில் இலங்கை விவகாரம் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரினால் விடுக்கப்பட்ட அறிக்கையையும், அறிவிப்புகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது.

எனவே, இம்முறை முன்வைக்கப்படவுள்ள புதிய பிரேரணைக்கு இணை அனுசரணையை வழங்கி அதை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

ஆனால், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானத்தை ஏற்கப்போவதில்லை, அதிலிருந்து விலகி நிற்போம் என ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணக்கூடிய சூழல் உருவாகியிருந்தது. நாடாளுமன்றத்தில் இருந்த மூன்றிலிரண்டு பெரும்பான்மையை இல்லாது செய்து அதை ஜனாதிபதி குழப்பினார். வடக்கில் காணிகளைச் சுவீகரிப்பதற்கு மீண்டும் அளவீடு ஆரம்பமாகியுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. தமிழ் அரசியல் கைதிகளும் விடுவிக்கப்படவில்லை. உண்மை நல்லிணக்க ஆணைக் குழு அமைக்கப்படவில்லை. பொறுப்புக்கூறும் கடப்பாடும் நிறைவேற்றப்படவில்லை.

இவ்வாறு எதுவும் நடைபெறாத நிலையில், மஹிந்த ஆட்சிக்கால பாணியில், தீர்மானத்தை ஏற்க மாட்டோம் என ஜனாதிபதி கூறுவதை ஏற்கமுடியாது. அனுசரணை வழங்கும் நிலைக்கு ஜனாதிபதி வரவேண்டும்.

பொறுப்புக்கூறப்பட வேண்டும்; உண்மைகள் கண்டறியப்பட வேண்டும்; போர்க்குற்ற விசாரணை நடந்தாக வேண்டும்; ஜெனீவாத் தீர்மானம் அமுல்படுத்தப்பட வேண்டும்.

மாறாக ஜெனீவாத் தீர்மானம் நிறைவேற்றப்படாவிட்டால், தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்படாவிட்டால் ஜனநாயக வழியில் போராடுவதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை. முஸ்லிம் கட்சிகளையும், மலையகக் கட்சிகளையும் இணைத்துப் போராடுவோம். ஜெனீவாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் நடவடிக்கை ஆரம்பமாகும்.

மன்னார் மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பில் வெளியாகியுள்ள அறிக்கையானது ஏமாற்றமளிக்கின்றது. உண்மை என்னவென்பதைக் கண்டறிய மீண்டும் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

போர்த்துக்கேயர் காலத்துக்குரியவை எனக் கூறப்படுவது தவறாகும். எனவே, வேறொரு நாட்டில் விசாரணை நடத்தப்பட வேண்டும் - என்றார். (ஜ)

## 3 விடயங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழ்க் கூட்டமைப்பு சார்பில் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சுமந்திரன் ஆகியோரும் ஜே.வி.பி. சார்பில் அநுரகுமார திஸாநாயக்கா, ரில்வின் சில்வா, லால்காந்த ஆகியோரும் இந்தச் சந்திப்பில் பங்குபற்றினர்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக்காகத் தாங்கள் நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையாகச் சமர்ப்பித்திருக்கும் 20 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவு தரும்படி ஜே.வி.பியினர் கூட்டமைப்பைக் கோரினர்.

அதை ஆதரிப்பதில் தங்களுக்குப் பிரச்சினை ஏதுமில்லை என்று தெரிவித்த கூட்டமைப்பினர், எனினும் அதிகாரப் பகிர்வு உட்பட தேசியப்பிரச்சினைக்கான தீர்வை அரசமைப்பு மாற்றம் மூலம் எட்டுவதே தங்களின் பிரதான இலக்கு எனக் குறிப்பிட்டனர்.

அந்த முயற்சிக்குத் தாங்கள் முழு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர் என்றும், எதிர்காலத்தில் வழங்குவர் என்றும் குறிப்பிட்ட ஜே.வி.பி. தலைவர்கள், ஆனால் அரசமைப்பை மாற்றித் தமிழர்களுக்கு நீதி செய்ய வேண்டும் என்ற நியாயப் போக்கில் பிரதான இரண்டு தேசியக் கட்சிகளும் இல்லை என்பதை விசனத்துடன் சுட்டிக் காட்டினர்.

அதேசமயம் ஜனநாயகத்தை நிலை நிறுத்துதல், ஊழல் மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகத்தை ஒழித்தல் ஆகியவற்றில் ஒன்றிணைத்து செயற்படுவது என்றும் -

இந்த விடயத்தில் தீவிரத்துடனும், உண்மை மற்றும் நேர்மையுடனும் செயற்படும் அரசியல் கட்சிகள் அல்லாத சமூக அமைப்புகள் மற்றும் சிவில் நிறுவனங்களை ஒன்றிணைத்துக் காரியங்களை முன்னெடுப்பது என்றும் -

இரு கட்சிகளினதும் தலைவர்கள் தீர்மானித்தார்கள்.

இனப்பிரச்சினைத் தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து ஜே.வி.பியின் தலைவர்களுக்கு கூட்டமைப்புப் பிரமுகர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. விளக்கமளித்தார். (உ)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதாக தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜெனீவாவில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 40 ஆவது கூட்டத்தொடரில் அடுத்த வாரம் இலங்கை விவகாரம் ஆராய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது, இலங்கை சார்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிரதிநிதிகளாக அனுப்பப்படுகின்ற மூவர்குழுவும், வெளியுறவு அமைச்சின் சார்பில் கலந்து கொள்பவர்களும் கடந்த 2015 ஒக்ரோபர் தீர்மானம் தொடர்பில் இருவேறு நிலைப்பாடுகளை முன்வைக்கவுள்ளனர். அதனால் இலங்கை மீதான சர்வதேச நெருக்குதல்கள் குறைவதற்கு வாய்ப்புள்ளது.

இலங்கையிடமிருந்து இருவேறுபட்ட நிலைப்பாடுகள் வெளிப்படுத்தப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால் இலங்கை அரசு ஒரு முற்றுகைக்கு உள்ளாகிய நிலையில் இருக்கின்றது என்ற எண்ணம் சர்வதேச சமூகத்துக்கு ஏற்படும். அத்தகைய முற்றுகை நிலையிலிருக்கும் அரசொன்றை முன்னைய ஜெனீவாத் தீர்மானத்தின் ஏற்பாடுகளை நடை. முறைப்படுத்துமாறு அதீதமாக நெருக்குதலுக்கு உள்ளாக்க முடியாது என்றே சர்வதேச சமூகம் முடிவுக்கு வருமென நம்பலாம் - என்றார். (ஜ)

## அரசியலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வில்லை. அத்தோடு சட்டத்துறையில் சுமந்திரன் விண்ணாதி விண்ணராக இருக்கலாம். ஆனால் அரசியல் அவர் அப்படியில்லை என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கல்வியங்காட்டில் உள்ள அவரது வீட்டில் நேற்று மாலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு இலங்கைக்கு இரண்டு தடவைகள் கால அவகாசம் கொடுக்கப்பட்டது. இவ்வாறு நான்கு வருடங்கள் கொடுக்கப்பட்டு இப்போது அது முடிவடைந்த நிலையில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

அதில் ஐ.நா தீர்மானத்தில் சொல்லப்பட்ட விடயங்களில் காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் இலங்கை அரசு மேற்கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார். கால அட்டவணையின் பிரகாரம் ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தின் அலுவலகத்தை இலங்கையில் நிறுவ வேண்டுமென்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

எம்மைப் பொறுத்தவரை அவரது அந்தக் கருத்துக்கள் நல்ல விடயம். ஆனால் இங்கு நடப்பது வேறு மாதிரியே உள்ளது. இலங்கை அரசைப் பொறுத்தவரை அந்தத் தீர்மானங்களை நிறைவேற்றத் தயாரில்லை. அதேவேளை, ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸில் அதனை நிறைவேற்ற வேண்டுமென்று கூறுகின்றது.

இந்நிலையில் கூட்டமைப்பின் தலைவரும் ஒரு சிலரும் ஐ.நா கண்ணகாணிப்பு வேண்டுமென்றும் அது கால நீடிப்பு அல்ல என்றும், கண்காணிப்பதற்கு இன்னும் இரண்டு வருட கால அவகாசம் கொடுக்க வேண்டுமென்றும் கூறுகின்றனர்.

ஆனால் இலங்கையை ஏன் கண்காணிக்கவேண்டும்? மனித உரிமைகள் கவுன்ஸிலில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் அந்தக் கண்காணிப்பு தொடரும். இலங்கை அரசுக்கு இன்னும் இரண்டு வருட காலம் கொடுத்தால் அவர்கள் எதனையுமே செய்யப் போவதில்லை.

இவ்வாறான நிலையில் எதற்காக இனியும் கால அவகாசம் கொடுக்கப்படவேண்டும். ஆனால் இது கால அவகாசமல்ல கண்காணிப்பே என்றும் சம்பந்தன், சுமந்திரன் கூறுகின்றனர். அனால் இது ஒட்டுமொத்தமான தமிழ் மக்களையும் முட்டாள்களாக்கும் விடயம். இதனை அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

ஐ.நா. கண்காணிப்பு என்றால் என்ன கண்காணிக்கப் போகிறீர்கள் என நான் கேட்கிறேன். ஆனால் இந்தக் கண்காணிப்பை நாங்கள் எடுத்துவிட்டோம் என்றால் இலங்கை அரசு தப்பித்துக் கொள்ளும் என்றும், மாற்று வழி என்ன என்றும் கேட்பது மட்டுமல்லாமல், முடிந்தால் விண்ணாதி விண்ணர்கள் பாதுகாப்புச் சபைக்குக் கொண்டு போகட்டும் என்றும் சுமந்திரன் கூறுகின்றார்.

இவ்வாறு தமிழ்க் கட்சிகளுக்குச் சவால் விடத்தான் சுமந்திரனால் முடிந்துள்ளதே தவிர இந்தப் பிரச்சினைகளைக் கையாளத் தெரியவில்லை. அவர் தான் விண்ணாதி விண்ணர் என்றும் ஏனையவர்களுக்கு ஏதும் தெரியாதது போலவும் கருத்துக்களைச் சொல்கிறார். ஆனால் சிலவேளை அவர் சட்டத்துறையில் விண்ணாதி விண்ணராக இருக்கலாம். ஆனால் அரசியலில் அவர் அப்படியில்லை.

அண்மையில் இங்கு வந்த பிரிட்டன் உள்ளிட்ட சில நாடுகளின் குழுவினருடன் சம்பந்தன், சுமந்திரன் பேசியிருக்கின்றனர். இதன்போதே அவர்கள் கால அவகாசம் வழங்குவதற்கான இணக்கத்தை தெரிவித்திருக்கின்றனர். ஆனால் அவர்கள் மக்களின் முடிவு இதுதான் என கனடா, ஜேர்மன், பிரிட்டனுக்குச் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் இவர்கள் அவ்வாறு சொல்லவில்லை.

கால அட்டவணையொன்றும் வரப்போவதும் கிடையாது. பாதுகாப்புச் சபைக்குக் கொண்டு போகப்போவதும் கிடையாது. இங்கு தவறு இழைத்தவர்கள் சம்பந்தனும் சுமந்திரனும் தான். அவர்கள் அந்த நாடுகளுடன் தமிழ் மக்களின் ஒருமித்த நிலைப்பாடு என்ன என்பது தொடர்பில் உறுதியாகப் பேசியிருக்கவேண்டும். ஆனால் வந்த வெளிநாட்டுக் குழுவினருக்கு என்ன தேவையோ அதற்கு ஆமாப் போட்டு தலையாட்டி இருக்கின்றனர்.

இந்த விவகாரங்கள் தொடர்பாகக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளாக உள்ள ரெலோ மற்றும் புளொட் ஆகிய கட்சிகளின் தலைவர்களுக்கோ அல்லது தமிழரசுக்கட்சியின் தலைவருக்கோ எதனையும் தெரிவிக்கவில்லை. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே எதுவும் தெரியாது - என்றார். (ஜ-07)

## இலங்கைக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மக்கள் பிரதிநிதிகள் செயற்படத் தவறுவது தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகம் என யாழ் பல்கலைக்கழகச் சமூகம் தெரிவித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், ஊழியர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இணைந்து பல்கலைக்கழகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் மக்கள் கடந்த பத்து வருடங்களாக நீதிக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இன்னமும் நீதி வழங்காமல் தொடர்ந்தும் இழுத்தடிக்கின்ற செயற்பாடுகளே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆகையால் ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு தொடர்ந்தும் கால அவகாசம் வழங்குவதில் பயனில்லை. எனவே கால அவகாசம் வழங்கக்கூடாது. அவ்வாறு கால அவகாசம் வழங்குவதற்கு தமிழ்த் தரப்புக்களும் ஆதரவை வழங்கக் கூடாது.

ஆகவே இலங்கை விவகாரத்தை ஐ.நா பாதுகாப்புச் சபை ஊடாக சர்வதேச நீதிமன்றுக்குக் கொண்டு செல்லவேண்டியது அவசியம். இவ்வாறான நிலையிலேயே ஒட்டுமொத்த தமிழ் மக்களும் இனியும் கால அவகாசம் இலங்கைக்கு வழங்கவேண்டாமென்ற கோரிக்கையை முன்வைத்திருக்கின்றனர். மேற்குறிப்பிட்டவாறு தமிழ் மக்கள் எடுத்திருக்கும் நிலைப்பாட்டுக்கு அமைய நீதிக்கான போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட மக்கள் நீதிக்கான கோரிக்கையை முன்வைத்து போராடுகின்றபோது இலங்கை அரசு பாதிக்கப்பட்ட மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் நிலைமையே உள்ளது. கால அவகாசம் கொடுப்பதால் எந்தவித பிரயோசமும் இல்லை. அது தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு ஒப்பானது போன்றதே.

எனவே இந்த நிலைமை இனிமேலும் தொடராமல் - கால அவகாசம் வழங்காது சர்வதேச குற்றவியியல் நீதிமன்றுக்கு இலங்கையைக் கொண்டுசெல்ல வேண்டும். அவ்வாறு செய்வதனூடாகவே நீதி கிடைக்குமெனத் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஆகவே ஒட்டுமொத்த தமிழ் மக்களினதும் இந்தக் கோரிக்கைக்கமைய தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் செயற்படவேண்டும். தமிழ் மக்கள் வாக்களித்து மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்லது தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகள் என அனைவரும் குறுகிய கால அரசியல் நோக்கங்களைக் கைவிட்டு கட்சிநலன்களைக் கருத்திற்கொள்ளாமல் பொது நலன் அடிப் படையில் செயற்படவேண்டியது அவசியமானது - என்றனர். (ஜ-07)

## சுமந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்,

இனப்படுகொலை என்ற விடயத்தைச் சர்வதேசத்தின் முன்னால் எடுத்துச் செல்லமுடியாது எனக் கூறியதை சுமந்திரன் மறந்துவிட்டாரா எனவும் கேள்வி எழுப்பினார்.

சமகால அரசியல் நிலமைகள் குறித்து நேற்று யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து கூறும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கால நீடிப்பா? கண்காணிப்பு நீடிப்பா? என விவாதங்கள் எழுந்திருக்கும் நிலையில், விண்ணாதி விண்ணன்கள் யாராவது இருந்தால் இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்குக் கொண்டுசெல்லுங்கள் பார்க்கலாம் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறியுள்ளார். நாங்கள் சுமந்திரனுக்குக் கூற விரும் புவது மன்னாதி மன்னர்களை எல்லாம் மக்கள் புரட்சி வேரொடு பிடுங்கி எறிந்த வரலாற்றை மறக்கக்கூடாது.

இனப்படுகொலை என்பதைப் பகிரங்கமாகச் சர்வதேசத்தின் முன்னால் எடுத்துச் செல்ல முடியாது என நீங்கள் கூறியதை மறந்துவிட்டீர்களா? எனக்கும், அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானத்திற்கும் நீங்கள் எழுத்தில் எழுதிய கடிதங்கள் இப்போதும் இருக்கின்றன.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தின் புதிய ஆணையாளரின் அறிக்கையிலும் இனப்படுகொலை என்பது மேலோட்டமாக கூறப்பட்டிருக்கின்றது. வடக்கு மாகாணசபையின் 28 மாகாண சபை உறுப்பினர்களும், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 5 உறுப்பினர்களும் கையொப்பமிட்டு அப்போதைய ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு அனுப்பிய கடிதத்தைத் தொடர்ந்து எமக்கு எதிராக தேசத்துரோக குற்றம் சுமத்தப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது.

இவ்வாறு பல தடைகளைத் தாண்டி பல விடயங்களை நாம் சாதித்தோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பல சாதனைகளை புரிந்துள்ளது. ஆகவே நானா? நீயா? என்பதற்கு அப்பால் மக்களுக்கு என்ன தேவை என்பதை உணர்ந்து ஒன்றிணையவேண்டும் - என்றார். (ஜ-07)

# சீனத் தயாரிப்புப் பொருள்களைப் பயன்படுத்துவதில் இலங்கையில் பாதுகாப்புப் பிரச்சினை ஏதுமில்லை!

## டிஜிட்டல் உட்கட்டமைப்பு, தொழில் நுட்ப அமைச்சர் அஜித் பெரேரா கூறுகிறார்

கொழும்பு,மார்ச் 12

சீனத் தயாரிப்பு பொருள்களைப் பயன்படுத்துவது தொடர்பாக, இலங்கைக்கு எந்தப் பாதுகாப்புப் பிரச்சினையும் இல்லை என்று டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

உலகில் சீனாவின் Huawei நிறுவனத்தின் தயாரிப்புகளைப் பயன்படுத்தும் 170 நாடுகளில் இலங்கையும் உள்ளடங்கியுள்ளது.

Huawei நிறுவனத்தின் நிறுவுநர், சீன இராணுவத்தில் பணியாற்றியவர் என்பதால், பல நாடுகள் Huawei நிறுவனத்தின் தயாரிப்பான கருவிகளைப் பயன்படுத்துவது குறித்து கரிசனையை வெளியிட்டுள்ளன.

இந்த நிறுவனத் தயாரிப்புகளுக்கு அமெரிக்கா உட்பட சில நாடுகள் தடை விதித்துள்ளன. தன் வர்த்தகப் பொருள்கள் மூலம் இந்த நிறுவனம் அவற்றைப் பயன்படுத்துவோருக்குத் தெரியாமல் விடயங்களை உளவு பார்க்கின்றது என அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது. இதற்கு எதிராக அந்த நிறுவனம் அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள இலங்கை அமைச்சர் அஜித் பெரேரா -

வணிகமும், அரசியலும் இரண்டு வேறுபட்ட விடயங்கள். நாம் அவை இரண்டையும் கலந்து விடக் கூடாது.

Huawei தயாரிப்பு பொருள்கள் உள்ளிட்ட சீன உற்பத்திகளை பாதுகாப்பாகவும் வெற்றிகரமாகவும் இலங்கை பயன்படுத்துகிறது.



அரசியல் ரீதியாக நாடுகள் வெவ்வேறு நிகழ்ச்சி நிரல்களைக் கொண்டிருக்கலாம்.

Huawei நிறுவுநர் சீன இராணுவத்தில் பணியாற்றியவர் என்று அவர்கள் கூறுகிறார்கள். அதனால் என்ன?

பல நிறுவனங்களின் தலைமை நிறைவேற்று அதிகாரிகள் இராணுவத்தில் பணியாற்றியவர்களாக இருக்கிறார்கள்.

அதனால் அவர்களின் வணிகத் தயாரிப்புகள் இராணுவ அல்லது அரசியல் சார்ந்தவையாக உள்ளன என்று கூற முடியாது - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## மனோ கணேசன் தந்தையின் பெயரில் 48 வீடுகள் கொண்ட புதிய கிராமம்

### கேகாலை டெனிஸ்வத்த தோட்டத்தில் கையளிப்பு







மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரத்தின் நிதியொதுக்கீட்டில் கேகாலை மாவட்டத்தின் டெனிஸ்வத்த தோட்டத்தில் 48 வீடுகள் கொண்ட வீ. பீ. கணேசன்புரம் எனும் புதிய கிராமம் நேற்று முனதினம் மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

தேசிய ஒருமைப்பாடு அரச கரும மொழிகள் சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசனின் தந்தையும் முன்னாள் யூனியன் தலைவரும் நடிகருமான வீ. பீ. கணேசனின் பிறப்பிடமான அங்கு அவரின் ஞாபகமாக அந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

2016 டெனிஸ்வத்த தோட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கே இந்த வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலை வரும் அமைச்சருமான பழனி திகாம் பரம், நாடாளுமன்ற உறுப்பினர்களான சுஜிதா விஜயமான்ன, சுஜித் பெரேரா, ஐக்கிய தேசிய கட்சியின் தெரணியகலை அமைப்பாளரும் மாகாண சபை உறுப்பினருமான அனுருத்த பொல்கம்பல, அமைச்சர் மனோ கணேச னின் மனைவி, பிரதேச சபை உறுப் பினர்கள் மற்றும் பல முக்கியஸ்தர் களும் கலந்து கொண்டனர்.

## ரூ. 2 கோடி பெறுமதி நகைகளுடன்; விமான சேவை அதிகாரி கைது

### கட்டுநாயக்க விமான நிலையத்தில்



சட்ட விரோதமான முறையில் தங்க நகைகளை எடுத்து வர முற்பட்ட வெளிநாட்டு விமான சேவை ஒன்றில் கடமையாற்றும் இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் டோஹாவில் இருந்து வருகை தந்த கட்டார் விமான சேவைக்குச் சொந்தமான QR 664 என்ற விமானத்தின் மூலம் இந்த நபர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

அந்த நபரிடம் இருந்து 2கோடியே 15 லட்சம் ரூபா பெறுமதியான 4 கிலோ 43 கிராம் எடையுடைய தங்க வளையல்கள் 423 கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### கொலை தொடர்பில் தேடப்பட்டு வந்த

## சந்தேக நபர் சுட்டுக்கொலை

நவகமுவ பகுதியில் துப்பாக்கிச்சூட்டு காயங்களுடன் கண்டெடுக்கப்பட்ட சடலம் தொடர்பில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நவகமுவ, கொடெல்லவத்த பகுதியில்உள்ள இறப்பர்தோட்டத்தில் இருந்தே இந்தச் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

37 வயதுடைய சமில பிரசாத் கருணாரத்ன எனும் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று தொடர்பில் பொலிஸாரினால் தேடப்பட்டு வந்த ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த நபர் கடந்த டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி மகோல பகுதியில் வைத்து தனுஷ்க சஞ்சீவ எனும் மன்னா கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸாரினால் தேடப்பட்டு வந்த பிரதான சந்தேக நபர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தச் சடலத்திற்கு அருகில் இருந்து ரி 56 துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் தோட்டாக்களும் ரவைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள்
பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை




20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, மாநகரசபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536

நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

கிளிநொச்சியில் – இல.10, கண்டி வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (தம்ரோ காட்சியறை அருகில்). 076 443 1576

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அச்சகத்தில் 12.03.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.